வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
விர மலர் ஈழநாடு

Email : news@eelanadu.lk

மலர் : 03 | 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 333 | பக்கங்கள் : 20





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை




08
எங்களின் நிலம்...! எமக்கு வேண்டும்...!! ஓயாது ஒலிக்கும் வலி. வடக்கு



10
நிலைமாறு அரசியலில் தடுமாறும் தலைகள்!



11
இலங்கைக்கு தேவை ஒரு ஒபாமாவோ சுனக்கோ அல்ல!



13
கொசோவோ தனிநாடு உருவாக்கம்:

## நிதி அமைச்சராக அலி சப்ரி?



கொழும்பு, நவ. 06

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, புதிய நிதி அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சுதவிர ஏனைய அமைச்சுகளை ஜனாதிபதி வகிக்க முடியாது. அமைச்சு பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்

19

## வவுனியாவில் நேற்று அதிகாலை கோர விபத்து; சாரதி, யாழ்.பல்கலை மாணவி உட்பட மூவர் பலி!

### 16 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்





வவுனியா, நவ. 06

வவுனியா, நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சாரதி உட்பட மூவர் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதி சொகுசு பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வவுனியா, நொச்சிமோட்டைப் பாலத்தில் மோதி தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்று அதிகாலை 12.15 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.

19

## நாட்டில் எரிபொருளுக்கு செயற்கைத் தட்டுப்பாடு

### திங்கட்கிழமை சீராகும்

கொழும்பு, நவ. 06

நாட்டில் நிலவும் செயற்கை எரிபொருள் தட்டுப்பாடு நாளை திங்கட்கிழமை முடிவுக்கு வரும் என இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

19

# தமிழருக்கு அரசியல் தீர்வு நிச்சயமாக வழங்குவோம்!

### நீதி அமைச்சர் திட்டவட்டம்



கொழும்பு, நவம்பர் 06

புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

19



## தடம்புரண்டது யாழ்தேவி

வவுனியா, நவ. 06

காங்கசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த யாழ்தேவி விரைவு ரயில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வவுனியா மற்றும் மதவாச்சிக்கு இடையில்

19

## இலங்கையின் நிலைமை தொடர்பில் இங்கிலாந்து பாராளுமன்றில் விவாதம்

லண்டன், நவ. 06

இலங்கையின் நிலைமை குறித்து அடுத்த வாரம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நிலைமைக்கான பிரித்தானியாவின் பதில்

19

## மொட்டுக் கட்சியின் கீழ்மட்டத்திலும் பிளவு

கொழும்பு, நவ. 06

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிச் சபை

19

## மக்களுடன் வீதியில் இறங்கி தேர்தலை சந்திக்க நாம் தயார்!

### அரசுக்கு சஜித் எச்சரிக்கை



கொழும்பு, நவ. 06

"உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் செயலாகும். மக்கள் கோரிக்கை விடுப்பது தேர்தலே என்பதால் அதை

19

## குரங்கம்மை நோய் குறித்து அச்சமடைய தேவையில்லை!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, நவ. 06

குரங்கம்மை நோய்க்கு உள்ளான ஒருவருடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களுக்கு மாத்திரமே அந்நோய் ஏற்படும். எனவே இலங்கையில் குரங்கம்மை நோயாளர் இனங்காணப்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

பல மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் ஒரு ஊடகவியலாளர் கேள்வி கேட்டபோது, 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளு மன்றத் தேர்தலில் கள்ளவாக்குப் போட்ட விவகாரம் தொடர்பாக கூறுகையில், நானும் 75 வாக்குகளுக்கு மேல் போட்டவன் என்று குறிப்பிட்டிருந்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

அதனை உடனே ஒரு சட்டத்தரணி அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு முயன்றதும் உண்டு.

அந்தத் தேர்தலில் முதல் தடவையாக விடுதலைப் புலிகள் தேர் தல் அரசியல் ஒன்றில் கவனம் செலுத்தியதும், தமது வேட்பாளர்க ளாக சிலரை களமிறக்கியதும் "பகிரங்கமான இரகசியம்".

அந்தத் தேர்தலில் கள்ளவாக்குப் போடுவதற்காகவே அப் போது இந்தியாவிலிருந்த ஒரு பழைய ரியூட்டரிக்காரரை தாயகத் திற்கு அழைத்திருந்ததாக அவரே ஒரு தடவை இந்த ஊர்க்குருவி யிடம் கூறியிருந்தமை ஞாபகம். அவரிடம் கள்ளவாக்குப் போடு வதற்காக அவரது பழைய மாணவர்கள் பலர் இருப்பார்கள் என்று அவர்கள் நம்பியிருக்கலாம்.

அந்தத் தேர்தல் தொடர்பாக அப்போது தேர்தல் பார்வையா ளர்களாக வந்திருந்த சர்வதேச பார்வையாளர்களும் பகிரங்க மாவே குற்றம்சாட்டியிருந்தனர். அதுகுறித்து இன்றுவரை தனது ஒவ்வொரு அறிக்கைகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி குறிப்பிடத் தவறுவதில்லை.

அந்தத் தேர்தலில் கள்ளவாக்குகள் அளிக்கப்பட்டன என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று என்பதை அழுத்திச் சொல்வதற் காகவே சிறிதரன் தானும் 75 வாக்குப் போட்டேன் என்று சொன் னாரே தவிர, அது அவரும் அப்படிப் போட்டிருப்பார் என்ற அர்த்தமல்ல என்று நினைக்கின்றேன்.

அதேபோலத்தான், அண்மையில் கூட்டமைப்பின் மற்று மொரு எம்.பியான எம்.ஆபிரகாம் சுமந்திரனும், பாராளுமன் றத்தில் ஒரு வாக்கெடுப்பு நடந்தால் அதனை ஆதரித்து வாக்களிக்கவேண்டும் அல்லது எதிர்த்து வாக்களிக்கவேண்டும். அப்படி இல்லாமல் நடுநிலைமை வகிப்பவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள் என்று தெரிவித்திருந்தார்.

அதற்காக கட்சி ஒரு விடயத்தில் நடுநிலைமை வகிப்பது என்று முடிவெடுத்தால் அவர் நடுநிலைமை வகித்தால் அதன் அர்த்தம் அவர் முதுகெலும்பு இல்லாதவர் என்பதல்ல.

ஆனால் கடைசியாக நடந்த 22ஆவது அரசமைப்பு திருத்த வாக்கெடுப்பில் கட்சி பாராளுமன்றக் குழு கூடி ஒரு தீர்க்கமான முடிவெடுக்காதது கட்சியின் தவறு. அந்த வாக்கெடுப்புக்கு முன்னதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராய்ந்தபோது முதலில் தனது நிலைப்பாட்டை சுமந்திரன் வெளிப்படுத்தியிருந்தார். அவர் ஏற்கனவே தனது தனிப்பட்ட முடிவில், அதனை மிகக்கடுமையாக எதிர்த்து பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றியிருந்ததால் தன்னால் அதனை ஆதரிக்க முடியாது என்ற தனது கருத்தை அவர் சொல்ல, அங்கிருந்த மற்றவர்கள் தாங்கள் அதனை ஆதரிக்கப்போவதாகச் சொன்ன போது, அவர் அதனை பாராளுமன்றக் குழுவின் முடிவாக எடுத் தாரா என்பது தெரியவில்லை. அது அல்ல இன்று நாம் இங்கே சொல்ல வருவது.

அதற்குப் பின்னர் சிறிதரன், டான் ரிவி பேட்டி ஒன்றில் சுமந்தி ரன் ஆதரித்தால் மற்றையவர்கள் எதிர்ப்பது என்ற மனநிலையில் தான் இருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்தமை தமிழ் அரசியல் உலகில் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

பலரும் தத்தமக்கு - தமது சுயவிருப்புகளுக்கு ஏற்றமாதிரி அதற்கு பொழிப்பு சொல்லி வருகின்றனர்.

கடைசியாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் துணைச் செயலாளர் வெளியிட்ட அறிக்கையில், கூட்டமைப்பு இனி முடிவுகளை கொள்கை சார்ந்து எடுக்குமா அல்லது நபர்கள் சார்ந்து எடுக்குமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

சுமந்திரன் முடிவுகளை தன்னிச்சையாக எடுக்கிறார் என்பதை சற்று அழுத்தமாக சொல்வதற்காகவே சிறிதரன் அப்படிச் சொல்லியிருப்பார் என்பது புரிந்து கொள்ளக்கூடியதே.

அதில்கூட அவர் சொன்னது, அவர் எடுக்கின்ற முடிவுகளை ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு எதிராக முடிவெடுப்பதே பெரும் பாலானவர்கள் மனநிலை என்றுதான் அந்தப் பேட்டியில் சிறிதரன் சொன்னாரே தவிர, அப்படித்தான் முடிவெடுப்போம் என்று அழுத்தம் திருத்தமாக அவர் சொல்லவில்லை.

அவர் இதுவரை எடுத்த முடிவுகள் எல்லாமே தவறானவை என்பதை இப்போதாவது சிறிதரன் சொல்லிக்காட்டியுள்ளார் என் பது இந்த ஊர்க்குருவியை பொறுத்தவரை மகிழ்ச்சிக்குரியதே. அதையே இந்த ஊர்க்குருவியும் கடந்த தேர்தல் காலத்திலிருந்து சொல்லியும் வருகின்றது.

அதற்காக, அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சமஷ்டித் தீர்வை கொண்டுவருகின்றபோது, அதனை சுமந்திரன் ஏற்றுக்கொண் டால், அதனை கூட்டமைப்பின் மற்றைய எம்.பிக்கள் எதிர்ப்பார் கள் என்று அவர் சொன்னதாக யாரும் நினைத்தால் அதற்கு சிறிதரன் என்ன செய்வது.?

- ஊர்க்குருவி.

# கிராம உத்தியோகத்தர்களுக்கு இனிமேல் பொலிஸ் அதிகாரம்!

கொழும்பு, நவ. 06

இதுவரை பொலிஸ் நிலையத்தின் சிறிய முறைப்பாடுகள் பிரிவின் பொறுப்பதிகாரி தீர்த்து வைத்து வந்த சிறிய முறைப்பாடுகளை தீர்த்து வைக்கும் பொலிஸ் அதிகாரத்தை கிராம உத்தியோகத்தர்களுக்குவழங்குவது சம்பந்தமாக அரசாங்கம் விசேட கவனத்தை செலுத்தியுள்ளது.

இதன் முதல் கட்டமாக கிராம உத்தியோ கத்தர்கள் சமாதான அதிகாரிகளாக வலுவூட் டப்பட உள்ளனர். இதன் மூலம் கிராம உத்தி யோகத்தர்களுக்கு இருக்கும் பொலிஸ் அதி காரத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் ஊக்குவிக்கப்பட உள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள 14 ஆயிரம்கிராம உத்தியோகஸ்தர்கள் இந்த பணியில் ஈடுபடுத் தப்படவுள்ளதால், 14 ஆயிரம் பேரை பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொண்டமைக்கு அது ஈடாகும் என அரசாங்கம் நம்புகிறது.

இதன் போது பொலிஸ் அதிகாரத்திற்கு இணையான அதிகாரத்தை கிராம உத்தியோ கஸ்தர்களுக்கு வழங்க அரசாங்கம் எதிர்பார்த் துள்ளது.

கீழ் மட்டத்தில் உள்ள கிராம உத்தியோகத் தர்களை இந்த பணி தொடர்பில் வலுவூட்ட பொலிஸ் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக அரச நிர்வா கம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இனிவரும் காலங்க ளில் ஒருவரது தேசிய அடையாள அட்டை காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் அது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை. கிராம உத்தியோ கஸ்தரிடம் அது தொடர்பாக முறைப்பாட்டை செய்து, அடுத்த கட்ட நட வடிக்கைகளை எடுக்க முடியும்.

அத்துடன் கிராமங்களில் நடக்கும் சிறிய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸ் நிலையத்திற்கு செல்லாது கிராம உத்தியோகஸ்தரிடம் முறைப்பாடு செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும். இந்த நடவடிக்கை யால், மக்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லும் சந்தர்ப்பங்கள் குறையும்.

கிராம உத்தியோகஸ்தர்களை வலுவூட்டுவ தற்காக அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஐக்கிய நாடுகள் அபிவி ருத்தி வேலைத்திட்டத்திடம் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட் டத்திடம் இருந்து இதற்காக முதல் கட்டமாக எட்டரை மில்லியன் ரூபா நிதி கிடைக்க உள் ளது எனவும் அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வடக்கு - கிழக்கில் இரு தினங்கள் மழை

யாழ்ப்பாணம், நவ. 06

கடந்த சில நாட்களாக வங்காள விரிகுடா வில் நிலைகொண்டிருந்த காற்றுச் சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்து தற்போது தென்னிலங் கையில் அசைவற்று நிலை கொண்டுள்ளது. இதனால் அடுத்த இரண்டு தினங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது பரவலாக மித மானது முதல் கனமானது வரை மழை கிடைக் கும் வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 08.11.2022 அன்று மத்திய வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இது சில வேளை களில் வலுக்குறைந்த ஒரு புயலாக மாறுவ தற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அதே வேளை இது புயலாக மாறாது விட்டாலும் ஒரு ஆழ்ந்த காற்றமுழுத்த தாழ்வு மண்டலமாக மாறும். இது புயலாக மாறினாலோ அல்லது ஆழ்ந்த காற்றமுழுத்த தாழ்வு மண்டலமாக மாறி னாலோ இது பின்வரும் இரண்டு பாதைகளி னூடகவே கரையைக் கடக்கும் வாய்ப்புள்ளது.

1. வங்காள விரிகுடாவினூடாக நகர்ந்து இந்தியாவின் தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் பகுதிகளுக்கு (காவேரி ஆற்றின் முகத்துவார பகுதிகள்- டெல்டா) அண்மித்து கரையைக் கடக்க கூடும்.

2. வங்காள விரிகுடாவினூடாக நகர்ந்து இலங்கையின் வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மற்றும் சாளைக்கு இடையில் நிலப்பகுதிக்குள் நகர்ந்து பூநகரிக்கு அண் மித்து அரபிக் கடலுக்குள் பிரவேசிக்க கூடும்.

இத் தாழமுக்கம் எந்த வடிவில் எந்த பாதை யில் நகர்ந்தாலும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முதல் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக் கும் பரவலாக மிதமானது முதல் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்தோடு காற் றும் சற்றுப் பலமாக வீசக்கூடும். அதே வேளை எதிர்வரும் 09 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீன வர்கள் கடலுக்கு செல்வதில் அவதான மாக இருப்பது அவசியம். ஆகவே தாழ்வான பிர தேசங்களில் உள்ள மக்கள் கனமழையோடு இணைந்த வெள்ள ஆபத்தை எதிர்கொள்வதற் கான தயார்நிலையில் இருப்பது மிகவும் அவசியம்.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இந்த நவம்பர் மாதத்தின் பெரும்பாலான நாட்களில் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றார். (அ)



கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத் தால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட சாயி பஜனை நூல்களை சாயி நிலைய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகனின் சார்பில், சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் நேற்று முன்தினம் வட இந்தியாவில் உள்ள புட்டபர்த்தி சத்ய சாயி பாபா அறங்காவ லர் சபை தலைவர் சாயிஸ்ரீ ரத்னாகாரரி டம் வைபவ ரீதியாக கையளித்தார். (அ)

## சுவர் இடிந்து வீழ்ந்து மூதாட்டி உயிரிழப்பு

கொழும்பு. நவ. 06

மாத்தளை - இறத்தோட் டையில் சுவர் இடிந்து வீழ்ந்த தில் மூதாட்டி ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இந்த சம்பவம் பதிவானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களிமண்ணாலான சுவர் இடிந்து வீழ்ந்ததில், மண் ணில் புதையுண்டு 82 வயதான மூதாட்டி ஒருவரே உயிரிழந் துள்ளார்.

சடலம் இறத்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை இறத் தோட்டை பொலிஸார் முன் னெடுத்துள்ளனர். (அ)



## மீண்டும் எரிபொருள் வரிசை?

கொழும்பு, நவ. 06

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் மீண்டும் எரி பொருள் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின் றனர்.

நாட்டில் இன்னும் சில தினங்களில் எரிபொருளின் விலையை குறைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு காணப்படுவதால் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதை நிறுத்தியுள்ளனர்.

தற்போது உள்ள விலைக்கு எரிபொருளை வாங்கிப் பின் விலை குறைக்கப்பட்டவுடன் அந்த விலைக்கு விற்பனை செய்ய முடியாது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிலையங்களில் மக்கள் மீண்டும் வரிசையில் நிற்கத் தொடங்கியுள்ளனர். (அ)

## சமூக சீர்கேடுகளைத் தடுக்க கிளிநொச்சியில் விசேட குழு!

கிளிநொச்சி, நவ. 06

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்துவதற்கு அரச அதிபர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

விசேட குழு ஒன்றினை, உருவாக்கி அவற்றைக் கட்டுப்படுத்தற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தக் அகுழு நியமிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

# அரசு எப்படிதான் சதி செய்தாலும் தேர்தலை பிற்போட இடமளியோம்

## ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்



கொழும்பு, நவ. 06

"உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் எத்தகைய சூழ்ச்சித் திட்டங்களை வகுத்தாலும், அவற்றை தோற்கடிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது விடயத்தில் எதிரணிகள் ஒன்றிணைந்து கூட்டு தாக்குதலை மேற்கொள்ளும்."

- இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் முக்கியஸ்தரும், சட்டத்துறை பேராசிரியருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் பீரிஸ் கூறியவை வருமாறு,

2023 மார்ச் 20 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல். நடத்தப்பட வேண்டும். அதற்கான பூர்வாங்கப் பணிகள் தற்போது ஆரம்பமாகியிருக்க வேண்டும். எனவே, தேர்தலை நடத்துவதற்கான நிதியை அரசாங்கத்திடம், தேர்தல் ஆணைக்குழு கோர வேண்டும். அதிகாரிகளை நியமிக்க வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே தேர்தல் ஆணைக் குழுவின் நிலைப்பாடும்கூட.

ஆனால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் தீவிரம் காட்டிவருகின்றது. இதன் ஓர் அங்கமாக தேர்தல் முறைமை பற்றி ஆராய தெரிவுக்குழு அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல. ஏனெனில் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்வதற்கு தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழு பல சந்திப்புகளை நடத்தியது. தற்போது அறிக்கைகூட முன்வைக்கப்பட்டுள்ளது. அக்குழுவால் ஆழமாக ஆராயப்பட்டு முன்வைக்கப்பட்ட அறிக்கை இருக்கையில், மற்றுமொரு தெரிவுக்குழு எதற்கு?

தேர்தலை நடத்துவதற்கான நிதியை தட்டுப்பாடின்றி வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பிரதான கடப்பாடு என உயர்நீதிமன்றம்கூட இதற்கு முன்னர் தீர்ப்பளித்துள்ளது. மக்களின் சர்வஜன வாக்குரிமையின் ஓர் அங்கமே தேர்தல். சர்வஜன வாக்கெடுப்பின்றி அதனை பிற்போட முடியாது.

அதேவேளை, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்திக் கொள்வதற்காக எதிரணிகள் ஒன்றிணைந்து உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளன.

இதற்கிடையில் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தற்போது அமுலுக்கு வந்துள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களில் பிரதான இடத்தை வகிப்பது தேர்தல் ஆணைக்குழுவாகும். அதற்கான உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவை ஊடாக நியமிக்கப்படுவார்கள். எனவே, அரசியலமைப்பு பேரவைக்கு மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

புதிய தேர்தல் ஆணைக் குழுவை வைத்து தேர்தலை பிற்போட அரசு சூழ்ச்சி செய்தாலகூட, அவை அனைத்தையும் தோற்கடிக்க எதிரணிகள் நடவடிக்கை எடுக்கும் - என்றார். (அ)

## போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த மன்னார் பாடசாலைகளில் விசேட நடவடிக்கை



மன்னார், நவ. 06

மன்னார் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப் பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள்,நிகழ்ச்சிகள் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள பல பாடசாலைகளில் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத் துறையினரும் ,கல்வி துறையினரும் இணைந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப்பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை பாடசாலை சமூகத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெற்றோரின் சம்மதத்துடன் சிகிச்சைகளை நாடிவரும் ஆரோக்கியமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (அ)



## கார்த்திகை மாத மரம் நடுகை முருங்கன் மத்திய கல்லூரியில்

மன்னார், நவ. 06

'மரம் நாட்டுவோம் எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்' எனும் தொனிப் பொருளில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் எண்ணக்கருவில் வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் மர நடுகை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் முருங்கன் மத்திய கல்லூரியில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள், வன்னிமண் அறக்கட்டளையின் உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் குறித்து ஆராய மஹிந்த தேசப்பிரிய தலைமையில் புதிய குழு

கொழும்பு, நவ. 06

முன்னாள் தேர்தல் ஆணையாளரான மஹிந்த தேசப்பிரிய தலைமையில் உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் தொடர்பாக ஆராய்வதற்காக தேசிய குழுவொன்று ஒன்று பிரதமர் தினேஷ் குலவர்தனவினால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த குழு நவம்பர் முதலாம் திகதி முதல் அடுத்த வருடம் பெப்ரவரி 28ஆம் திகதி வரையான காலப்பகுதி வரை உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் விசேட வருத்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மஹிந்த தேசப்பிரிய தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த குழுவில், ஜயலத் ரவி திசாநாயக்க, டபிள்யூ எம் ஆர் அதிகாரி, கே தவலிங்கம், ஐ ஏ ஹமீட் ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# அவசரமாக ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகிறார் ரணில் விக்கிரமசிங்க!

## பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன்

கொழும்பு, நவ. 06

**திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருவதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.**

எதிர்க்கட்சி பலவீனமாக உள்ளதால், தற்போதைய அந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு செல்வதற்கும், அதனூடாக ஸ்திரமான ஆட்சியை நடத்துவதற்கும் ஜனாதிபதி ரணில் உத்தேசித்துள்ளதாக அறிய முடிகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுடன் கடந்த சில நாட்களாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றார்.

உடனடி ஜனாதிபதித் தேர்தல் ஒன்று வருமாயின் ரணிலை வேட்பாளராக நிறுத்தி அவரை வெற்றிபெறச் செய்ய ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளூர் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது. (அ)

# ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக்க முயற்சி!

கொழும்பு, நவ. 06

பயணிகளுக்கு அதிகபட்ச வினைத்திறனான சேவையை வழங்கும் வகையில் ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவது தொடர்பில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் இதர சலுகைகள் இழக்கப்படாமலும் அல்லது வெட்டப்படாமலும் இருக்கும் வகையில் பணிகளைச் செய்வதே நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

ரயில்வே திணைக்களத்தை திறமையான அமைப்பாக மாற்றுவதற்கு, அதனை ஓர் அதிகார சபையாக மாற்ற வேண்டும் என கடந்த காலங்களில் அரசாங்கத்திடம் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. (அ)



# இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் செல்வோர் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 06

இலங்கையில் இருந்து மூன்று மாத குழந்தையுடன் மூன்று குடும்பத்தை சேர்ந்த மேலும் 10 பேர் அகதிகள் தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளர்.

நேற்றுமுன்தினம் இரவு மன்னாரில் இருந்து படகில் சென்று நேற்று சனிக்கிழமை அதிகாலை 1 மணியளவில் நடுதிட்டு பகுதியைச் சென்று அடைந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு ராமேஸ்வரம் மரைன் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தியுள்ளனர்.

மேலும் விசாரணைக்கு பின்னர் 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படுவார்கள் என மரைன் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை இலங்கையில் இருந்து 198 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆட்சி மாற்றம் ஏற்படவேண்டுமானால் போராட்டங்களல்ல தேர்தலே தேவை!

## குமார வெல்கம எம்.பி.



கொழும்பு, நவ. 06

சாதாரண மக்கள் போராட்டத்தில் கலந்துகொள்ளாததால் இரண்டாம் திகதி நடந்த எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த போராட்டம் தோல்வியடைந்தது. போராட்டத்தால் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முடியாது, தேர்தல் இடம்பெற்றால் மாத்திரமே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

புதிய லங்கா சுதந்திர கட்சியின் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சர்வதேச அங்கீகாரம் உள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடியின் போது அரசியல் கொள்கைக்கு முன்னுரிமை வழங்க முடியாது. பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவேன். அதற்காக அரசாங்கத்தின் பக்கம் செல்லமாட்டேன்.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நாடுகள் அரசியல் கட்சி என்ற ரீதியில் வேறுபட்டு செயல்படாமல் ஒன்றிணைந்து செயல்பட்டு நிலைமையை வெற்றிகொண்டுள்ளன. அதனை நாமும் ஓர் எடுத்துக்காட்டாக கொள்ள வேண்டும். தேர்தல் காலத்தில் அவரவர் தமது அரசியல் கொள்கைக்கு அமைய செயல்பட்டு கொள்ளலாம்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கடந்த 2ஆம் திகதி (புதன்கிழமை) கொழும்பில் நடத்திய போராட்டம் தோல்வியடைந்துள்ளது. அரசியல் கட்சிகளுக்கு ஆதரவானவர்களே போராட்டங்களில் கலந்துக்கொண்டார்கள். அரசியல் கொள்கையற்ற சாதாரண மக்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஜூன் மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் போராட்டம் உண்மையானது. பலவீனமான ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் ஒன்றிணைந்து அதில் வெற்றிபெற்றார்கள். தற்போது போராட்டத்தில் ஈடுபடுபவர்களிடம் உண்மை நோக்கம் கிடையாது. அரசியல் நோக்கத்தை அடிப்படையாக கொண்டதாக போராட்டம் இடம்பெறுகிறது - என்றார். (ஐ)

# போலி நாணயத்தாளைக் கொடுத்து மதுபானம் வாங்கிய சிப்பாய் கைது!

கொழும்பு, நவ. 06

போலி நாணயத்தாளுடன் இராணுவ சிப்பாயொருவர் தியத்தலாவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 5000 ரூபா போலி நாணயத்தாள் மீட்கப்பட்டுள்ளது.

தியத்தலாவை நகரின் மதுபான விற்பனை நிலையத்தில் இராணுவச் சிப்பாய், போலி 5000 ரூபா நாணயத்தாளினை கொடுத்து மதுபானமொன்றினை கொள்வனவு செய்ய முயன்றுள்ளார். இதன்போதே மதுபான விற்பனை நிலைய முகாமையாளர், இராணுவச் சிப்பாய் வழங்கிய ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் மீது சந்தேகம் கொண்டு அது குறித்து தியத்தலாவைப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் அங்கு விரைந்து சென்று 5000 ரூபா நாணயத்தாளை பரிசீலித்த போது அது போலியானது என தெரிய வந்துள்ளது. அதன் பின்னர் இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அவ்விசாரணையின்போது இராணுவ சிப்பாய் இராணுவ பயிற்சிப்பாடசாலை கணினித் தொகுதியின் மூலம் இரு ஐயாயிரம் ரூபா நாணயத்தாள்களை பெற்றதாகவும் அந்த நோட்டுக்களில் ஒன்றை பயன்படுத்தி மதுபானத்தைப் பெற முயற்சித்ததாகவும் தெரிவித்துள்ளார். இச்செயற்பாடுகளுக்கு மேலும் மூன்று இராணுவத்தினர் உடந்தையாக இருந்ததாக கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் கூறியுள்ளார். (அ)

# இன்று எகிப்து பறக்கிறார் ரணில் முக்கிய சந்திப்புக்களுக்கு ஏற்பாடு!

கொழும்பு, நவ. 06

எகிப்தில் ஷாம் எல் சீக் நகரில் இன்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை காலநிலை மாற்றம் தொடர்பான கோப் 27 உலக மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை எகிப்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் எதிர்வரும் 7ஆம், 8 ஆம் திகதிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். இலங்கையில் உருவாக்கப்படவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் தொடர்பாகவும் இலங்கை உட்பட சர்வதேச ரீதியிலான காலநிலை மாற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது உரையின்போது கருத்துக்களை முன்வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எகிப்துக்கான விஜயத்தின்போது, எகிப்திய ஜனாதிபதி எப்டெல் பெட்டா சிஸி மற்றும் அந்நாட்டு பிரதமர் மொஸ்டாபா மெட்பௌலி ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். நான்கு தினங்களுக்கான விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி எதிர்வரும் 10 ஆம் திகதி மீள நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐ.தே.கவுடன் கூட்டுக்கு தயாராகின்றது மொட்டு?

கொழும்பு, நவ. 06

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி அமைக்க கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

Eelanadu
06.11.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியாவிடம் எதிர்பார்த்தல்?

தமிழ்த் தேசியத் தரப்புக்கள் இந்தியாவிடம் அதிகமாக எதிர்பார்க்கின்றனர். தங்களின் எதிர்பார்ப்பிற்கு அமைவாகத்தான் இந்தியா நடந்துகொள்ளவேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றனர். இந்தியா அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதுதான், தமிழ்த் தேசியத் தரப்புக்களின் அடிப்படையான எதிர்பார்ப்பாகும். விடயங்களைச் சற்று ஆழமாக பார்த்தால், பிராந்திய சக்தியான இந்தியா, ஈழத் தமிழர்களின் சேவகன் போன்றதொரு மனோபாவமே தமிழ்த் தேசியவாதிகள் என்போரிடம் காணப்படுகின்றது. தமிழர்கள் அழைத்தால் இந்தியா வரவேண்டும் - தமிழர்கள் தேவையில்லை போ - என்றால் இந்தியா போகவேண்டும். இது தான் தமிழ் தேசியவாதிகளின் இந்தியா தொடர்பான நிலைப்பாடு.

உலகில் பலமான நாடுகளின் நிகழ்சிநிரலை எவருமே மாற்றியமைத்துவிட முடியாது. பலமான நாடுகளின் தீர்மானங்கள் அதன் தேசிய பாதுகாப்பு மற்றும் நீண்டகால நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். ஈழத் தமிழர் பிரச்னையில் இந்தியாவின் தலையீடும் அதன் தேசிய பாதுகாப்பு மற்றும் நலன்களின் அடிப்படையில்தான் இடம்பெற்றது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனைகளை கருத்தில் கொண்டு செயற்பட்டிருந்தால், இந்தியாவின் இராணுவத் தலையீடு இடம்பெற்றிருக்க வாய்ப்பில்லை.

ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தன விடயங்களை தனது நோக்கில் மட்டும் சிந்தித்ததன் விளைவாகவே, இந்தியாவும் ஒரு பெரியண்ணன் மனோபாவத்தில் செயற்பட்டிருந்தது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன பின்னர் நிலைமைகளை விளங்கிக் கொண்டே, இந்தியாவுடன் இணங்கிச் செல்லும் முடிவை எடுத்திருந்தார். இந்த பின்புலத்தில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதனடிப்படையில்தான், இணைந்த வடக்கு - கிழக்கிற்கான மாகாண சபை தேர்தல் இடம்பெற்று, வரதராஜப்பெருமாள் முதலமைச்சரானார். குறித்த மாகாண சபை நிர்வாகம் குறுகிய ஆயுளுடன் முற்றுப்பெற்றது. இந்திய அமைதிப் படையின் எஞ்சிய இராணுவ அணியினர் மற்றும் வரதராஜப்பெருமாள் ஆகியோரை ஏற்றிக்கொண்டு, இந்தியப் இராணுவத்தின் இறுதிக் கப்பல், 1990, மார்ச் மாதம், திருகோணமலையிலிருந்து வெளியேறியது. இது பழைய கதை.


புதிய கதை என்ன? இந்தியா சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்விற்கு ஆதரவளிக்கவேண்டும். இதுதான் பலரது எதிர்பார்ப்பு. ஆனால் இந்தியாவோ தொடர்ந்தும் 13ஆவது திருத்தம் சட்டம் தொடர்பிலேயே வலியுறுத்தி வருகின்றது. இந்தியா ஏன் அவ்வாறு வலியுறுத்துகின்றது என்பதை விளங்கிக்கொள்வது கடினமான விடயமல்ல. ஏனெனில் ஒரு இருதரப்பு உடன்பாடு என்னும் வகையில், அதனை வலியுறுத்தும் கடப்பாட்டை இந்தியா கொண்டிருக்கின்றது. ஆனால் அதில் தமிழர்கள் கரிசனையுடன் இல்லாவிட்டால், இந்தியாவின் அணுகுமுறை வெறும் உதட்டளவு விடயமாகவே சுருங்கிவிடும். அப்படித்தான் இப்போதிருக்கின்றது.

13இற்கு அப்பால் செல்லவேண்டும், ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்டு, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பதுதான் நம் அனைவரதும் விருப்பமாகும் ஆனால் எப்படி? எவரிடமும் பதிலில்லை. ஆனால் அதனை இந்தியா செய்து தரவேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம். தேவை இந்தியாவிற்குத்தான் இருக்கின்றது என்றும் கூறுகின்றோம்.

இந்தியாவின் நலன்களை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது அவர்களின் பிரச்னை. சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான எல்லைப்புறம் 3500 கிலோ மிற்றர் தூரம் கொண்டது. இந்த எல்லைப் பிரச்னையின் காரணமாகத்தான் 1962இல் சீன - இந்திய யுத்தம் இடம்பெற்றது. 1955இலிருந்து, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்னை நீடித்துவருகின்றது. இறுதியாக 2020இலும் இரண்டு இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இரண்டு பகுதியிலும் 20இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 3500 கிலோமீற்றர் எல்லைப்புறத்தில் இரவு பகலாக விழித்துக் கொண்டிருக்கும் இந்தியா, யாழ்ப்பாணத்திற்கும் தமிழ் நாட்டிற்குமுள்ள வெறும் 16 கிலோமீற்றர் துரத்தை கையாள முடியாமல் தடுமாறுகின்றதா? எனவே கற்பனைகளை விடுத்து, நிஜத்திற்கு திரும்புவதே இப்போது தேவையானது. இருப்பதை பயன்படுத்திக் கொண்டு, நாம் எதிர்பார்க்கும் உயர்ந்த தீர்விற்காகவும் ஓரணியாக செயலாற்றவேண்டும். அதுதான் புத்திசாதுர்யமான தெரிவாகும்.

# குடியேறிகள் விடயம் பிரான்ஸ் பாராளுமன்றில் இனவெறிப் பேச்சு!

## சபை இடைநிறுத்தம் தேசியவாதக் கட்சி எம்.பிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை





*பிரான்ஸின் பாராளுமன்றத்தில் குடியேறிகளுக்கு எதிராக எம்பி ஒருவர் வெளியிட்ட வார்த்தைகள் ”இனத் துவேஷம்” கொண்டவை என்று கருதப்படுவதால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.*

*'Qu'il retourne en Afrique!' என்ற பிரெஞ்சு வார்த்தையின் ஆங்கில அர்த்தம் 'They should go back to Africa!' என்றே அமையும். ஆனால் பிரெஞ்சு மொழியில் “அவன்”("il") என்பதும் “அவர்கள்”("ils") என்பதும் ஒருவனையும் பலரையும் ("he" and "they") குறிக்கின்ற ஒரே அர்த்தத்தைத் தரக்கூடியது.*

*தனது சக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பார்த்து "Qu'il retourne en Afrique!" என்ற வார்த்தையைக் கூறிய தீவிர வலது சாரி எம்பியின் கூற்றால் பிரெஞ்சு பாராளுமன்றத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. அவர் அந்தக் கறுப்பின உறுப்பினரையா ( he) அல்லது படகு அகதிகளையா (they) ஆபிரிக்காவுக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறினார்?*

*பிரெஞ்சு மொழியின் அர்த்தம் இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது.*


*நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது ஆபிரிக்காவில் இருந்து மத்தியதரைக் கடல் கடந்து வருகின்ற புகலிடக் கோரிக்கையாளர் தொடர்பாக இடதுசாரி எம்பி ஒருவர் கேள்வி எழுப்பினார். அவர் தீவிர இடதுசாரி ஜீன் லூக் மெலன்சோனின் La France Insoumise (LFI) கட்சியைச் சேர்ந்த - ஆபிரிக்கக் கறுப்பின எம்.பி ஆவார். கடலில் தத்தளிக்கின்ற ஆபிரிக்க அகதிகளை மீட்கும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவிகள் கிடைக்கின்றனவா என்று அந்த எம்.பி சபையில் கேள்வி எழுப்பினார். அச்சமயம் திடீரெனக் குறுக்கிட்ட தீவிர வலதுசாரி எம்பி ஒருவர், ”அவர்கள் ஆபிரிக்காவுக்குத் திரும்பிச் செல்லட்டும்” ("Qu'il retourne en Afrique!") “வேறு வழி இல்லை” ("Pas du tout !") என்று கூறினார். அவரது வார்த்தைகள் சபையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தின. கறுப்பின எம்பி ஒருவரது கேள்விக்கு இவ்வாறு ஆபிரிக்கர்களுக்கு எதிரான இனவெறி சார்ந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டதை ஏனைய உறுப்பினர்கள் பலர் கண்டித்தனர். அந்தக் குழப்பத்தினால் சபாநாயகர் சபை அமர்வை ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டது.*

*மரின் லூ பென் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு முதல் முறையாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த கிரேகுவா து பூர்னா என்பவரே தனது சக ஆபிரிக்க இன உறுப்பினர் கார்லோஸ் மார்டென்ஸ் பிலோங்கோ என்பவரை நோக்கி “நீ ஆபிரிக்காவுக்குத் திரும்பிப் போ” என்ற மறைமுக அர்த்தம் தரும் வார்த்தையை பாராளுமன்றத்தில் பயன்படுத்தியுள்ளார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதற்காக பாராளுமன்ற ஒழுங்கு விதிகளின் கீழ்*

*அவர் சபை நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. பிரான்ஸின் பாராளுமன்றத்தில் இது போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டமை மிக மிக அரிதாகும்.*

*வெளிநாட்டுக் குடியேறிகளை நாட்டுக்குள் உள்வாங்குதல், அவர்களை வெளியேற்றுதல் தொடர்பான மக்ரோன் அரசின் கொள்கைகளைத் தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்து விமர்சித்து வருகின்றனர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத எலிசபெத் போர்ன் அரசு, வரவு - செலவுத் திட்டம் உட்பட முக்கிய நிதிச் சட்டப் பிரேரணைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடி வருகிறது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# இதழ்கள் பற்றிய பகிர்வு

பகிர்வு -54

**கணபதி சர்வானந்தா**

“எங்கு வராமல் போய்விடுமோ?” என்ற பயம் என்னைத் தொற்றிக் கொண்டபோது கலைமுகம் 74 இதழ் கையில் கிடைத்தது. பலவிதமான போராட்டங்களுக்குப் பின் அதனைத் திருமறைக் கலாமன்றத்தினர் வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அது போன்று ஜீவநதி, தாயகம் எனச் சில சஞ்சிகைகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அந்த வரிசையில் கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்தினர் கடந்த 9 ஆண்டுகளாக வெளியிடும் காலாண்டுச் சஞ்சிகையான “வலு” வும் தனது 34 இதழை வெளிக் கொண்டு வந்திருக்கிறது.

யாழ். மண்ணைப் பொறுத்தவரை சஞ்சிகையின் ஆரம்ப வரலாறு என்பது ஒரு நீண்ட பின்னணியைக் கொண்டது. பலர் அதனைக் கட்டி வளர்த்திருக்கிறார்கள். எதுவித சுய இலாபமுமின்றி அவை தோற்றுவிக்கப்பட்டன. அதனிடையே பல சஞ்சிகைகள் தோன்றி மறைந்திருக்கின்றன. எனக்கு அறிய அண்மைக் காலங்களிலும் பல சஞ்சிகைகள் அச்சில் வெளியிடப்பட்டன. அவைகளுக்குப் பின்னால் இருந்த நல்ல நோக்கங்களும், சமூகச் சிந்தனைகளும் அளப்பரியவை. இலக்கிய உலகுக்குத் தம்மால் ஆன பங்களிப்பைச் செய்து விட வேண்டும் என்ற அவா அவர்களிடத்தே விஞ்சி நின்றதை நானறிவேன். இருந்தும் சம காலச் சூழ்நிலைகள் அவற்றுள் பெரும்பாலானவற்றின் முயற்சிகளுக்குத் தடை போட்டுவிட்டதாகவே எண்ணுகிறேன். முக்கியமாக அச்சிடலுக்கான மூலப் பொருட்கள் எல்லாவற்றினதும் விலை அதிகரித்திருப்பும் இதழ்களின் வருகையைப் பாதித்திருக்கிறது. மூன்று மடங்குக்கு அப்பால் விலைகளையிட வேண்டிய கட்டாயத்துக்குள் வெளியீட்டாளர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். இருந்தும் மனம் தளராது அம் முயற்சியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் சமூகப் பொறுப்பு மிக்க வெளியீட்டாளர்களுக்கு எமது பாராட்டுகளையும் நன்றி யையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார நெருக்கடிகள் பலவிதமான சமூக மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றனதென்பது உண்மைதான். இருந்தும் அவ்வாறான நெருக்கடிகள் மிகுந்த காலகட்டத்தில் எவ்வாறு புத்திசாதுர்யத்தோடு வாழ்வை நகர்த்திச் செல்லுகிறோமோ, அப்படி எம்மைச் சார்ந்து அனைத்து விடயங்களிலும் நாம் கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். அடுத்த சந்ததியினரை எண்ணி நாம் மேற்கொள்ள வேண்டிய ஒரு சமூகக் கடமை அது. எனவே இவ்வாறான சஞ்சிகைகள் தொடர் வருகை என்ற விடயத்தில் மக்களாகிய நீங்கள் சற்றுக் கவனம் செலுத்தியாக வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

“இது முக்கியம்” என ஒன்றை எண்ணினாலே போதும், அக் காரியம் நடந்தேறிவிடும். அந்த விடயம் மனத்தில் ஆழமாகப் பதிய வேண்டும். அது மனத்தோடு ஒன்றிப் போக வேண்டும். அதனால் தான் “அறம் செய விரும்பு” என்றார் ஔவையார். தொடர்ந்து வெளிவரும் சஞ்சிகைகள் அவைகளின் முயற்சிகளைத் தொடர உங்கள் அனுசரணை மிகவும் முக்கியம் என அவைகள் தொடர்பான தரப்பினர்களால் உணரப்பட்டிருக்கிறது. நீங்கள் எண்ணினாலே போதும் சஞ்சிகை உலகத்தில் பாரிய சாதனைகள் நிகழ்த்திக் காட்ட முடியும் என்ற நம்பிக்கை, அது சார்ந்தவர்களுக்கு உண்டு.

எமது சமூகத்திலே உள்ளவர்களில் ஆயிரம் பேர் மனம் வைத்தாலே போதும் ஒரு சஞ்சிகை இடையறாது வந்துவிடும். பல கோடிகளைக் கொண்டு பொது நிறுவனங்களைப் பேணிக்காத்து வருகின்ற ஒரு சமூகத்துக்கு இது ஒரு பெரிய விடயம் என எனக்குத் தோன்றவில்லை. குறிப்பாகச் சமூக நலனுக்காகக் கட்டியெழுப்பப்பட்ட மத வழிபாட்டுத்தலங்களைப் பேண நீங்கள் அள்ளி வழங்கும் ஆதரவுகள் பல இலட்சங்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சமூகப் பொறுப்பை ஏற்றுச் சாதனைகளைச் செய்கின்ற உங்களால் இதுவும் முடியும்.இதுவும் ஒரு சமூகக் கடமை என்று எண்ணுவதே சம காலத்தின் தேவை என்பது பலரது கருத்து.

இது தொடர்பில் முக்கியமாக அரச அனுசரணையில் இயங்குகின்ற பொது நூலகங்கள் கரிசனை கொள்ளலாம். அடுத்தது வட மாகாணத்தில் இருக்கின்ற பாடசாலைகள் எல்லாவற்றிலும் நூல் நிலையங்கள் உண்டு. அவற்றுக்கான அரச நிதி ஒதுக்கீடும் உண்டு. அவர்களும் இதில் அக்கறை கொள்ளலாம். அடுத்துப் பொது மக்கள் அனுசரணையோடு இயங்குகின்ற வாசிகசாலைகளும், நூலகங்களும் பல உண்டு. அவற்றுள் பலவற்றுக்குப் புலம் பெயர் தமிழர்கள் நிதி வழங்குகிறார்கள். அத்துடன் அரச திணைக்களங்கள், காரியாலயங்கள்,வங்கிகள் போன்ற தனியார் நிறுவனங்கள் இவ்வாறானவற்றிற்குரிய நிதி ஒதுக்கீட்டோடு இருக்கிறார்கள். அவர்களோடு பல்கலைக் கழகங்களும் இது பற்றிச் சிந்திக்கலாம்.

மேற் குறிப்பிட்டவர்கள் எண்ணினாலே போதும். ஆயிரம் சந்தாதாரர்களை ஒரு சஞ்சிகை பெற்றுக் கொள்ள வழிவகுக்க முடியும். நிலையாக ஆயிரம் வாசகர்களைக் கொண்டதாக ஒரு சஞ்சிகை இருக்குமானல் அது தொடர்ச்சியாக வெளிவரக் கூடிய நிதிப் பலத்தைக் கொண்டிருக்கும். அதற்கான விளம்பரங்களையும் பெற்றுத் தடையின்றிச் சிறப்புற வெளியீடுகளை நடத்த முடியும்.

அதற்காக, சமூகத்திலுள்ளவர்கள் அனைவரும் வாசிக்கிறார்கள் என்று இல்லை. வாசிக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. வாசிப்பதென்பது ஒருவர் அவர் கொண்டிருக்கும் விருப்புச் சார்ந்த விடயம். எனது சுய அவதானிப்பின்படி சமூகத்தைத் தாங்கி நிற்கின்றவர்கள் என்று கருதப்படுபவர்கள் எல்லோரும் வாசிக்கிறார்கள். அவர்களுக்குத்தான் சமூகத்தைப் பற்றிய “இற்றைப்படுத்தல்” அவசியமாகிறது. அவர்களைத்தான் இதழ்களும், சஞ்சிகைகளும் சென்றடைய வேண்டும். அவர்கள் மத்தியிலேதான் இது போன்ற வெளியீடுகள் தமது கருத்தை விதைக்க வேண்டும், தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இது தொடர்பில் கருவி நிறுவனம் ஒரு புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. தமது வெளியீடான வலு காலாண்டுச் சஞ்சிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற நோக்கில் “ஆயிரம் சந்தாதாரர்களைக் கண்டடைவது” என்ற ஒரு செயற்திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. அதன் முதற் கட்டமாக முதல் நூறு பேரை இணைப்பதென்ற விடயத்தில் பலரது வரவேற்பையும் பெற்றுள்ளது. தேனீக்களின் முக்கியத்தையும் அதன் செயற்பாட்டையும் உலகம் எப்படி நேரடியாக அறிந்து கொள்வதில்லையோ, அதே போலத் தான் பொது வெளியில் இதழ்களும், சஞ்சிகைகளும் ஏற்படுத்துகின்ற சமூகப் பயன்பாடுகளும் சமூகத்தால் அறியப்படுவதில்லை. வெளியீடுகள் அற்ற ஒரு பொதுவெளியைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள், காற்றில்லாத ஒரு உலகத்தைபோல அதனை உணர்வீர்கள்.

# இந்தவார ராசிபலன் 06.11.2022 - 12.11.2022

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : திரையோதசி

நவம்பர் 06 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஐப்பசி 20

### மேஷம் [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நினைத்ததை சாதித்து முடிப்பீர்கள். அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். செலவுகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும்.உங்கள் முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் சிலர் ஈடுபடுவீர்கள். அதனால் செலவு அதிகரிக்கும். குழப்பங்களுக்கு ஆளாவீர்கள். அதன்பின் நிலைமை சீராகும். வரவு அதிகரிக்கும்.

### ரிஷபம் [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

மகிழ்ச்சியை உண்டாகும். நினைத்ததை நிறைவேற்றி மகிழும் வாரம் இது. தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வருமானம் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். செலவுகள் அதிகரிக்கும். முயற்சிக்கேற்ப முன்னேறுவீர்கள். இதுவரை இருந்த பிரச்னைகளை முறியடிப்பீர்கள். பொருளாதார நெருக்கடிக்கு ஆளாவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

### மிதுனம் [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செயல்கள் வெற்றி பெறும். முயற்சிகள் நிறைவேறும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். எதிர்பாராத செலவுகள் தோன்றி சங்கடத்திற்கு ஆளாவீர்கள். செயல்களில் கவனம் தேவை. உங்கள் அணுகுமுறையால் நினைத்ததை சாதிப்பீர்கள். பூர்வீகச் சொத்தில் இருந்த பிரச்னை தீரும். வரவை விட செலவு அதிகரிக்கும். முயற்சிகளில் எச்சரிக்கை கவனம் தேவை. தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் ஆதாயம் உயரும்.

### கடகம் [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

முயற்சியில் நெருக்கடி உண்டாகும். அதன்பின் நிலைமை சீராகும். செயல்கள் வெற்றி பெறும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். உடல்நலனில் சங்கடம் உண்டாகும் என்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்படுவது நன்மையாகும். அவசர முடிவுகள் எதுவும் வேண்டாம்.

### சிம்மம் [ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வரவுகள் வந்து சேரும். எதிலும் கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். அரசு வழியில் நன்மை சேரும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும். எதிரிகள் பலமிழந்து போவார்கள். யோசித்து செயல்படுங்கள். நன்மைகள் ஏற்படும். செல்வாக்கு உயரும். செயல்களில் வெற்றி உண்டாகும். சிந்தித்து செயல்படுவதும் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நன்மை தரும்.

### கன்னி [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

முயற்சிகளில் நன்மை உண்டாகும். சுபநிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும்.சிந்தித்து செயல்படுங்கள். அதன்பின் நிலைமை சீராகும். யோகமான வாரமாகும். அரசு வழியிலும் நன்மை ஏற்படும். உங்கள் செயல்களில் வேகம் இருக்கும். மற்றவர்கள் மதிப்பிற்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் விலகும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். பணிகளில் கவனம் தேவை.

### துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிக்கேற்ற நன்மைகளை அடைவீர்கள். பொருளாதாரம் உயரும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்கள். கவனம் தேவை. அன்பு, பாசம், காதலுக்கு ஆளாவீர்கள். உங்கள் கவனம் சிதறும். எதிர்பாராத நெருக்கடிக்கு ஆளாவீர்கள். முயற்சிகள் நிறைவேறும். எண்ணம் பூர்த்தியாகும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அனைத்திலும் எச்சரிக்கை தேவை.

### விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

செயல்களில் கவனம் தேவை. முயற்சிகள் பலிதமாகும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். பகைவர்கள் பலமிழப்பர். அதிர்ஷ்டமான வாரம். எதிர்ப்பு விலகும். செயல்களில் எளிதாக வெற்றி பெறுவீர்கள். வெளி வட்டாரத்தில் செல்வாக்கு உயரும். பணவரவும் ஆதாயங்களும் மகிழ்ச்சியும் உண்டாகும். யோகமான வாரம். லாபம் காண்பீர்கள். எதிரிகள் விலகிச் செல்வர்.

### தனுசு [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

வேகமுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். எதிர்பார்ப்பை நிறைவேறும். யோசிக்காமல் செய்யும் செயல்களும் லாபத்தை ஏற்படுத்தும். பெரிய முயற்சிகளில் எளிதாக வெற்றி பெறும். நண்பர்கள் வழியே ஆதாயம் காண்பீர்கள். சிலர் விரும்பிய இடத்திற்கு மாறுதல் பெறுவர். செல்வமும் செல்வாக்கும் அதிகரிக்கும் வாரம்.

### மகரம் [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மனம் மகிழும்படியான சம்பவம் நடந்தேறும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். லாபம் காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் கூடுதல் கவனம் செலுத்து வதால் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். அந்நியரால் ஆதாயம் காண்பீர்கள். விருப்பம் எளிதாக நிறைவேறும்.

### கும்பம் [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சங்கடம் தீரும். அலைச்சலும் செலவுகளும் இருக்கும். மனம் மகிழும்படியான சம்பவம் நடக்கும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தினரின் ஆதரவால் மகிழ்ச்சி கூடும். பணியிடத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். செலவு, அலைச்சல் அதிகரிக்கும். வருமானம் உயரும்.

### மீனம் [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]


எதிர்பாராத செலவுகளால் நெருக்கடியை சந்திப்பீர்கள் அதன்பின் முயற்சி நிறைவேறி மகிழ்வீர்கள். சிலர் இருப்பிடத்தை மாற்றுவர். அரசு ஊழியர்கள் சிலருக்கு விரும்பாத இடமாற்றம் ஏற்படும். மனதில் ஏற்பட்ட சங்கடம் விலகும். நெருக்கடிகள் உண்டாகும். பேச்சு, உடல்நலனில் கவனம் தேவை. செலவு, அலைச்சல் அதிகரிக்கும். அதன்பின் திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை.

ஈழநாடு



## ஜெயலலிதா மரணம் குறித்த ஆறுமுகசாமி கமிஷன் அறிக்கை:

# சசிகலாவின் ‘சதிச் செயல்’ என்பது சட்ட அடிப்படையிலானதா? செல்வாக்கின் அடிப்படையிலானதா?



சென்னை மடல்

-பகவான் சிங்-

ஜெயலலிதா மரணமடைந்த ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும், அப்போதைய முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையிலான அ.இஅதிமுக அரசால் அமைக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும், ஓய்வு பெற்ற நீதியரசர் ஆறுமுகசாமி கமிஷன் தனது அறிக்கையை வெளியிட்டது. 75 நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு 2016 டிசம்பர் 5 அன்று அப்போலோ மருத்துவமனையில் ஜெயலலிதா உயிரிழந்தது குறித்த இந்த விசாரணை கமிஷன், அவரது நெருங்கிய தோழியான சசிகலாமீது இறப்புக்குப் பொறுப்பு என்ற குற்றம் சாட்டியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசரானஆறுமுகசாமி தனது 608 பக்க அறிக்கையை 2022 ஒகஸ்ட் 27 அன்று முதல்வர் மு. க. ஸ்டாலினிடம் சமர்ப்பித்தார். இதுகுறித்து இரண்டு நாட்களுக்குப் பிறகு விரிவான அமைச்சரவைக் கூட்டம் நடத்திய முதல்வர், ஒக்ரோபர் 18 அன்று அந்த அறிக்கையை மாநிலச் சட்டப் பேரவைமுன் வைத்து, இந்த அறிக்கையின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ள, சட்ட வல்லுநர்களையும் உயர் அதிகாரிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைப்பதாக உறுதியளித்தார்.

அறிக்கை பொதுவெளியில் வெளியானதும், அநேக சட்ட நிபுணர்களும் செய்திஊடக ஆசிரியர்களும் இது பிழைகளும் குறைகளும் நிறைந்தது என்றும், கமிஷன் அமைக்கப்படும்போது அதற்கு வழங்கப்பட்ட பொறுப்பிலிருந்து ஆறுமுகசாமி விலகிவிட்டதாகவும் விமர்சித்தனர். மக்கள் பணத்தைக் கோடிக்கணக்காகச் செலவு செய்து, நான்கு ஆண்டுகளாகக் காலத்தை நீட்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையை எதிர்த்து, இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தை அணுகி, எளிதில் இதிலிருந்து வெளிவரக்கூடியதாகவே உள்ளது என்றும் பலர் சுட்டிக்காட்டினர்.

கமிஷனுக்கு வழங்கப்பட்ட பொறுப்பு, ‘2016 செப்ரெம்பர் 22 அன்று ஜெயலலிதா மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான காரணங்களையும் சூழ்நிலைகளையும், அதைத் தொடர்ந்து 2016 டிசம்பர் 5 அன்று அவரது மரணம் என்ற துயரச் சம்பவம் நிகழும்வரை அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும்’ விசாரிப்பதுதான். அந்த மையப் பொருளை விட்டுவிட்டு, சுற்றி வளைத்து, அப்போலோ மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சையில் குற்றம் கண்டும், அமெரிக்க மருத்துவர்களின் பரிந்துரையின்படி, அவர் வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லப்படாததும், ‘அஞ்சியோ’ போன்ற இருதய சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படாததும் ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் தனது அறிக்கையில் ஆறுமுகசாமி, அரசின் தரப்பிலிருந்தோ கட்சியின் தரப்பிலிருந்தோ எவரும் ஜெயலலிதாவைச் சந்திக்க, சசிகலா அனுமதி மறுத்ததாகவும், ஜெயலலிதாவின் உடல்நிலை குறித்து மருத்துவர்கள் சசிகலாவிடமே தகவல் அளித்து, மேல் சிகிச்சைக்கான வழிகாட்டுதலையும் அவரிடமிருந்தே பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதாவது, வெளிநாட்டில் மருத்துவம் உள்ளிட்ட சரியான சிகிச்சை ஜெயலலிதாவுக்கு வழங்கப்படாமைக்கு சசிகலாவே காரணம் என்று பொருள்படுகிறது.

பழமைவாத ஊடகம் என்று பெயர்பெற்ற பல ஊடக நிறுவனங்களின் மூத்த ஆசிரியர்கள்கூட, ‘இந்த அறிக்கையைக் குப்பைத் தொட்டியில்தான் போடவேண்டும்’ என்று விமர்சித்தனர். ஆறுமுகசாமி தன்மீது வைத்த அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுத்து, சசிகலாவும் ஓர் அறிக்கை வெளியிட்டார். “அம்மாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் நான் எந்த விதத்திலும் தலையிடவில்லை.

இது குறித்த விசாரணைக்கும் நான் தயார்” என்றார் அவர். அவரது சகோதரியின் மகன் டிடிவி தினகரன், இந்த கமிஷன் அறிக்கையை எதிர்த்துச் சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடப்போவதாகத் தெரிவித்தார்.

அப்போலோ மருத்துவமனை நிர்வாகமும் இந்த அறிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தை நிச்சயம் அணுகும். அதில் வெற்றியும் பெறலாம். காரணம், இந்த அறிக்கையில் பல ஓட்டைகள் உள்ளன. ஆறுமுகசாமி உண்மையிலேயே தனது சட்ட அறிவைக்கொண்டு இந்த அறிக்கையைத் தயார் செய்தாரா அல்லது ஆதாயம் பெற விரும்பும் சிலரின் செல்வாக்கால் உந்தப்பட்டுத் தயார் செய்தாரா என்று வியக்கும் வகையில் அந்த ஓட்டைகள் உள்ளன என்று விமர்சனங்கள் எழுந்தன. விசாரணைக்கு இவரால் அழைக்கப்பட்ட பல மூத்த மருத்துவர்கள், விசாரணையின்போது தாங்கள் மிகவும் கடுமையாக நடத்தப்பட்டதாக உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளனர்.

ஜெயலலிதாவுக்குச் சிகிச்சை அளித்த அப்போலோ மருத்துவமனை மருத்துவர்களுக்கு உதவ, டில்லி எய்ம்ஸ் மருத்துவர்களின் ஒரு குழுவை அனுப்ப உத்தரவிட்டிருந்தது உச்ச நீதி மன்றம்.

ஆனால், அப்போலோ மருத்துவர்களின் சிகிச்சை திருப்தியளிப்பதாக இருப்பதாகவும், நோயாளியின் அனைத்துத் தேவைகளையும் கருத்தில் கொண்டுள்ளதாகவும் எய்ம்ஸ் மருத்துவர்கள் அளித்த அறிக்கையை ஆறுமுகசாமி என்ன செய்தார்? ஜெயலலிதாவின் மூச்சுத் திணறலுக்குத்தான் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும், அதைச் சீராக்கியபிறகே ‘அஞ்சியோ’ செய் யப்பட வேண்டும் என்றும் மருத்துவர்கள் முடிவு செய்தனர். மேலும், நுரையீரல் மற்றும் மூச்சுத் திணறல் பிரச்னை, இருதயக் கோளாறைவிட மிகத் தீவிரமாக இருந்ததால், அதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆனால், எய்ம்ஸ் மருத்துவர்களின் இந்த அறிக்கையை உதாசீனப்படுத்திய ஆறுமுகசாமி, முறையான சிகிச்சை வழங்கப்படவில்லை என்றும், அதற்குக் காரணம் 2011இல் ஜெயலலிதா-சசி கலா இடையே இருந்த பிணக்கை மனதில்கொண்டு சசிகலா, அம்மாவுக்கு எதிராகச் சதி செய்ததாகவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2012 ஜனவரி-பெப்ரவரியில் ‘தெஹல்கா’ இதழில், ஜெயலலிதா, போயஸ் கார்டனை விட்டு சசிகலாவை 2011, டிசம்பர் 19 அன்று துரத்தியதாகவும், சிறிதுசிறிதாக விஷம் கொடுத்துத் தன்னைக் கொல்ல சசிகலா சதி செய்ததாலேயே ஜெயலலிதா இந்த முடிவை எடுத்ததாகவும் செய்தி வெளியானது. வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவிப்பு வழக்கில் முதல் குற்றவாளியாக ஜெயலலிதாவும் இரண்டாவது குற்றவாளியாக சசிகலாவும் விசாரணையை எதிர்கொண்டிருந்த காலத்தில், பெங்களூரு விடுதி ஒன்றில் சசிகலா தங்கியிருக்கும்போது, தனது கணவன் நடராஜன் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுடன் உரையாடிய ஓடியோ ரேப் ஒன்று, ஜெயலலிதாவிடம் காவல் உளவுத்துறை வழங்கியதாகவும், அதில் மருந்தில் விஷம் கலந்தும் சர்க்கரை நோயுள்ள ஜெயலலிதாவுக்கு இனிப்புகளும் ஐஸ் கிரீம்களும் கொடுத்தும் கொல்லத் திட்டமிட்டுள்ளதாக சசிகலா தனது உறவினர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தது பதிவாகியிருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இந்தச் செய்தியைத் தனது அறிக்கையில் மேற்கோள் காட்டியி ருக்கிறார் ஆறுமுகசாமி. இந்தச் சதி குறித்துப் பல மூத்த காவல் துறை அதிகாரிகளை ஆறுமுகசாமி துருவித் துருவி விசாரித்ததாகவும், இந்த பெங்களூாரு ரேப் குறித்து ஜெயலலிதா எச்சரிக்கப்பட்டாரா என்று அவர்களிடம் மீண்டும் மீண்டும் கேட்டதாகவும், அவர்கள் அனைவரும் அதை மறுத்ததாகவும் கூறப்படுகிறது. இவர்களில் ஓர் அதிகாரி, பின்னர் என்னிடம், தான் எவ்வளவு மறுத்தும் மீண்டும் மீண்டும் சசிகலாவின் சதி குறித்து ஜெயலலிதாவுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதா என்று கேட்டது வேதனையளிப்பதாக இருந்தது என்று கூறினார். “நீதித் துறையில் இவ்வளவு அனுபவம் பெற்ற ஒரு முன்னாள் நீதியரசர், எந்த ஆதாரமும் இல்லாமல் வெளியான ஓர் ஊடக அறிக்கையின் அடிப்படையில், தனது ‘சதிச் செயல்’ என்ற கண்ணோட்டத்தை எப்படி அமைக்க முடியும்?” என்று வியந்தார் அவர். அவர் தனது பெயரை வெளியிட விரும்பாதது புரிந்துகொள்ளக் கூடியதுதானே? நீதியரசர் ஆறுமுகசாமிக்கு எதிராக இத்தனை குரல்கள் எழுந்திருக்கும் நேரத்தில், மாறுபட்ட தாக என் வாதம் அமையட்டும். மரியாதைக்குரிய என் ஊடக நண்பர்கள், ஜெயலலிதாவின் இறுதி நாட்களில் நடந்த அனைத்து விஷயங்களையும், விசாரணை கமிஷன் அமைத்த எடப்பாடி அரசின் நடவடிக்கையையும் கருத்தில் கொள்ளாமல், நீதியரசர் மீது நியாயமற்ற விமர்சனங்கள் வைப்பதாகவே கருதுகிறேன். இந்தியச் சான்றுச் சட்டத்தின் முக்கிய அம்சமான ‘சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியம்’ என்பதைக் கருத்தில் கொள்ளாமல் இந்த அறிக்கை மீதான விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. இந்தியச் சட்டங்கள் குறித்த சிறிது அறிவும், கொஞ்சம் பொது புத்தியும், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பத்திரிகையாளனாக இருந்து பெற்ற ஆறாவது அறிவையும் கொண்டு, சந்தர்ப்ப சூழ்நிலைகளின் சாட்சியங்கள் பெருமளவில் ஆறுமுகசாமி அறிக்கைக்கு ஆதரவாக இருப்பதாகவே நான் காண்கிறேன்.

ஆனால், இந்த முன்னாள் நீதியரசர், தனது இறுதி அறிக்கையில் இந்த அம்சம் குறித்து விவரமாகக் குறிப்பிடாதது துரதிர்ஷ்டவசமானதுதான். இதற்குக் காரணம், அவர் பணியாற்றியது விசாரணைச் சட்டத்தின் அடிப்படையில். அது, இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. குற்றம் சாட்டப்பட்டவரைத் தண்டிக்க, சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள் பயன்படுத்தப்படலாம் என்கிறது இந்திய தண்டனைச் சட்டம். ஆனால், விசாரணை கமிஷன் அறிக்கை என்பது, தண்டனை வழங்கும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்றும், அது ஒரு பரிந்துரைதான் என்றும் விசாரணை கமிஷன் சட்டம் கூறுகிறது.

## சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள் அறிக்கைக்கு ஆதரவாகவே உள்ளன!

தகுந்த ஆதாரமில்லாமல், கிடைத்த ஒரு தகவலை மட்டுமே கொண்டு வெளியான தெஹல்கா இதழின் செய்தி யின் அடிப்படையில் அமைந்த ஆறுமுகசாமி அறிக்கையை மறுக்கிறார்கள் அறிவு ஜீவிகள். ஆனால் இவர்கள், 2011-16 காலகட்டத்தின் நிகழ்வுகளைக் கருத்தில் கொள்ளாமலும், ஜெயலலிதாவின் உடல் நலக் குறைவு, மருத்துவமனையில் அனுமதி, மரணம் ஆகியவற்றின் உண்மைத் தன்மை மற்றும் நேர்மை குறித்துத் தங்கள் பொது புத்தி கொண்டு ஆராயாமலும் விமர்சிக்கிறார்கள்.

தனக்கு எதிராகத் தன்னைச் சுற்றிப் பின்னப்பட்டுவந்த சதி வலையைப் பற்றி அறிந்த ஜெயலலிதா, 2011 டிசம்பர் மாதத்தில் சசிகலா மற்றும் குடும்பத்தினரை போயஸ் தோட்ட இல்லத்திலிருந்து வெளியேற்றியது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. சசிகலா, தன் நெருங்கிய உறவினரான இளவரசியின் (வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவிப்பு வழக்கில் மூன்றாம் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு, பிறகு சசிகலாவுடன் சிறை சென்றவர்) மகளான கிருஷ்ணப்ரியாவின் தி நகர் வீட்டுக்குச் சென்று, இரண்டு மாதங்கள் அங்கு சத்தமின்றி வாழ்ந்து வந்தார். 2012 மார்ச் 28 அன்று, அவர் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், தான் அக்காவுக்கு விசுவாசமாகவே இருந்ததாகவும், தன் உறவினர்கள்தான் அக்காவுடன் இருந்த நெருக்கத்தைப் பயன்படுத்திச் சதித் திட்டம் தீட்டியதாகவும், அது கடந்த டிசம்பரில்தான் தனக்குத் தெரிய வந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும், தனக்கு எந்த அரசியல் ஆசையும் இல்லை எனவும், சதித் திட்டம் தீட்டும் உறவினர்களிடமிருந்து விலகி, அக்காவுக்கு உண்மையாக வாழவே விரும்புவதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார். அதைத் தொடர்ந்து, ‘அக்கா’வும் உடனடியாக சசிகலாவை மீண்டும் போயஸ் தோட்ட இல்லத்துக்கு அழைத்துக்கொண்டார்.

ஆனால், அதற்குப் பிறகும்கூட, அவர் மீதான சந்தேகத்தை ஜெயலலிதா கொண்டிருந்ததாகவும், அரசு ஒப்பந்தங்கள், கட்சி நிதி உள்ளிட்ட பண விவகாரங்களிலிருந்து அவரைத் தள்ளியே வைத்திருந்ததாகவும் எனக்குத் தகவல்கள் வந்தன. தனது அமைச்சர்கள் மற்றும் மூத்த அரசு அதிகாரிகளிடமும் தன் உத்தரவுகளை மட்டுமே அவர்கள் கடைபிடிக்கவேண்டும் என்றும், சசிகலாவின் உத்தரவுகளைப் பெறக்கூடாது எனவும் அவர் கூறியுள்ளார். 2011-12 தொடங்கித் தனது அத்தை சசிகலாவுக்கும் ‘அம்மா’ ஜெயலலிதாவுக்கும் இடையில் உறவுகள் சுமுகமாக இல்லை என்று கிருஷ்ணப்ரியா தனது விசாரணையில் குறிப்பிட்டதை ஆறுமுகசாமி எடுத்துக்காட்டுகிறார்.

(நாளை தொடரும்)

# எங்களின் நிலம்....! எமக்கு வேண்டும்...!!

## ஓயாது ஒலிக்கும் வலி. வடக்கு

“வலி. வடக்கு” போர் முடிந்த கடந்த 13 வருடங்களாக ஒலிக்கும் பெயர். 6,300 ஏக்கர் நிலத்துக்கும் மேற்பட்ட பகுதி இராணுவத்தின் பிடிக்குள் வந்தது.

போர் காலத்தில் 1990ஆம் ஆண்டு முதல் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலும் - உயர் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பு எல்லைகள் என்ற பெயரிலும் சுமார் 18 சதுர கிலோமீற்றர் பகுதிகள் இராணுவப் பிடிக்குள் வந்தன.

போர் முடிந்த பிற்பாடு உயர் பாது காப்பு வலய பாதுகாப்புக்கான பகுதிகள் விடுவிக்கப்பட்டன. அதன் பின்னர், உயர் பாதுகாப்பு வலயத்தின் சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன. தற்போதைய தகவல்களின்படி 3054.7 ஏக்கர் காணிகள் முப்படைகள் மற்றும் பொலிஸாரின் பிடியில் உள்ளன. இதில், 2054 ஏக்கர்கள் இராணுவத்திடமும் 274.57 ஏக்கர் கடற்படையிடமும் 646.5 ஏக்கர் விமானப் படையிடமும் 52.53 ஏக்கர் பொலிஸாரின் பிடியிலும் உள்ளன.

இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் கடந்த 32 வருடங்களாக இருப்பதற்கு நிரந்தர இடமின்றி - அகதிகளாக முகாம்களிலும் வாடகை வீடுகளிலும் வசிக்கின் றனர். சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்த இந்த மக்கள் இன்று விவசாயக் கூலிகளாகவும் கூலியாட்களாகவும் வறுமைக்குள் உழல்கின்றனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு எதிர்க்கட்சி தலைவராக இருந்த இன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலி. வடக்கு மக்களை சந்தித்த போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களுக்கு சொந்த மான அனைத்து காணிகளையும் விடுவிப்பேன் என்று உறுதி வழங்கினார். நல்லாட்சி அரசின் காலத்தில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன. தற்போது அவர் நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாகவும் உள்ளார். ஆனால், எந்த ஒரு காணியும் விடுவிக்கப்படவில்லை.

இன்றும் சொந்த நிலத்தில் ஏதிலிகளாக - வெறு மைக்குள் உழன்று அகதி வாழ்வு வாழும் மக்கள் அரசியல்வாதிகளின் வாக் குறுதிகளை நம்பி ஏமாந்து - சோர்ந்து - நொந்து போயிருந்தாலும் போராட்டங்கள்மீது நம்பிக்கை கொண்டு அவற்றை தொடர்கின்றனர். எங்களின் காணி விடுவிக்கப்பட்டுவிடாதா என்ற ஏக்கமும் போராட் டத்தின்மீதான மனதின் ஓரமாக உள்ள இன்னமும் தளர்ந்துவிடாத நம்பிக்கையும் தான். நிலங்களை பறிகொடுத்தவர்கள் தாங்கள் சுமக்கும் வலிகளின் மனக் குமுறல்களை இங்கு கொட்டுகிறார்கள்.





அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## தந்தையின் கடைசி ஆசையைகூட நிறைவேற்ற முடியவில்லை!




குமாரசாமி குணரத்தினம், மயிலிட்டி

காணி விடுவிப்பு தொடர்பில் நாங்கள் பல போராட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால், இந்த அரசாங்கம் கண்டு கொள்வதாக இல்லை. மயிலிட்டி துறையில் எனது சொந்தக்காணி உள்ளது. எமது காணியில் பாண் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் பல்பொருள் விற்பனை செய்யும் கடையும் வைத்திருந்தோம். 1990 ஆம் ஆண்டு மே 15ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக நாங்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது 33 வருடங்களாக வாடகை வீடுகளிலும் - உறவினர் வீடுகளிலும் - அகதி முகாம்களிலும் இருந்தோம். பெரும் செல்வத்துடன் வாழ்ந்த எங்கள் சமூகம் இன்று ஒரு பிடி சோற்றுக்கு வழியில்லாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனது தந்தையார் காலத்தில் - ஆங்கிலேயர் இருந்தபோது பலாலி முகாம் சிறியோர் கொட்டில் போன்றே இராணுவ முகாம் இருந்தது. எனது தந்தையார் என்னை அழைத்துச் செல்லும்போது நான் பார்த்திருக்கின்றேன். பலாலி முகாம் அந்த இடத்தில் சிறிய கொட்டிலாகவே இருந்தது.

எனது பூட்டன் பூட்டி காலத்தில், போர்த்துக்கேயர் - ஒல்லாந்தர் காலத்தில் இந்த மண் சிங்கள மக்களுடையதோ - சிங்கள இராணுவத்தின் முகாமுக்கோ ஒதுக்கப்பட்டதல்ல. அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டதும் கிடையாது. இது எங்கள் பரம்பரை சொத்து - எங்கள் பரம்பரை காணி இங்குதான் உள்ளது. எனது தந்தையர் 98 வயதில் அண்மையில் காலமானார். அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முதல் தான் பிறந்த மண்ணிலுள்ள மயானத்தில் தனது உடலை தகனம் செய்யுமாறு கூறியிருந்தார். ஆனால், அங்கு செல்லமுடியவில்லை.

அங்கு செல்லமுடியாது என்ற விடயத்தை அவருக்கு சொன்னாலும் விளங்கக்கூடிய நிலையில் அவர் இல்லை. வயது மூப்பால் புரிந்துகொள்ளும் சக்தியை இழந்திருந்தார். ஆனால், அவரின் கடைசி ஆசை தனது மண்ணில் தனது உடலை எரிக்க வேண்டும் என்பதே. எமது பரம்பரை நிலத்தை இராணுவ தலைமையகம் என்று கூறி எம்மை ஏமாற்றுகிறார்கள்.

நான் இறந்தால்கூட என்னை அங்கே தான் தகனம் செய்யும்படி நான் எனது உறவினர்களிடம் கூறினேன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நாங்கள் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். நமது பிரதேசத்தில் காணி விடுவிப்பு தொடர்பில் நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க விட்டால் நாங்கள் தொடர்ச்சியாக போராட வேண்டிய நிலை ஏற்படும்.

# காணி விடுவிப்புக்காக இந்தியா குரல்கொடுக்க வேண்டும்

**எஸ். சஜீவன், மீள்குடியேற்ற குழுவின் தலைவர்**



*சிங்கள தேசமானது தமிழர்களின் நிலங்களை வலி. வடக்கில் மாத்திரமல்ல தமிழர் பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்பு செய்து வருகின்றது. இராணுவத்தினரின் தேவைகளுக்காக பெருமளவு காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. கடந்த 1987 ஆம் ஆண்டு இந்த இடங்களை விட்டு வெளியேறி 15இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் வசிக்கிறோம்.*

*சிங்கள பயங்கரவாத அரசாங்கமானது தொடர்ச்சியாக காலத்தை இழுத்தடிப்பதற்கான வேலை திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது. தற்போதுகூட எங்களுடைய 3,054. 57 ஏக்கர் நிலப்பரப்பானது இராணுவத்தினரின் பிடியில் உள்ளது. பல ஆண்டுகளாக நாங்கள் போராடியும் எங்களால் இலக்கை அடைய முடியாமல் இருக்கின்றது. எங்களுடைய அரசியல் பிரதிநிதிகளின் அசமந்தபோக்காலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது.*

*ஒரு சில வழக்குகள் நடந்தாலும் ஒட்டு மொத்தமாக தமிழ் ஒன்றிணைந்ததற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம். குறிப்பாக எமது பிரதேசத்தில் இராணுவத்தினருடைய பிடியில் 2054 ஏக்கரும் கடற்படையின் பிடியில் 274.57 ஏக்கரும் விமானப் படையின் பிடியில் 646.5 ஏக்கரும் பொலிஸாரின் பிடியில் 52.53 ஏக்கர்கள் அவர்கள் வசமுள்ளன.*

*இந்த பிரதேசத்தில் முப்படையினர் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உல்லாச விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. விவசாயம் செய்து கொண்டிருக்கின்றார்கள். மது பானசாலைகளைக்கூட இராணுவத்தினர் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.*

*இப்படியாக எமது கலாசாரத்தை சீரழிப்பதற்கான நடவடிக்கையை இந்த பயங்கரவாத அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. பலதரப்பட்டபோராட்டங்கள் சந்திப்புகளை மேற்கொண்டும் எமது இலக்கை அடைய முடியாத நிலையே உள்ளது. கடந்த ஐந்து வருட காலமாக நாங்கள் அமைதியாக இருந்து எமக்கு எந்த பிரயோசனமும் கிடைக்கவில்லை தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எமது போராட்டங்களில் கலந்து கொண்டு தான் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவேன் என கூறி சென்றார். ஆனால், இன்று அதனை மறந்து இப்படி ஒரு சம்பவம் இருக்கின்றதா என்று கேள்வி எழுப்பும் அளவுக்கு அவரது செயல்பாடு காணப்படுகின்றது.*

*இந்த காணி விடுவிப்பு விடயத்தில் இந்திய அரசாங்கமானது கட்டாயமாக அழுத்தத்தை கொடுக்க வேண்டும். அவ்வாறு அழுத்தம் கொடுக்கப்பட்டால் மாத்திரமே எமது தமிழ் மக்களுடைய காணிகள் இராணுவத்தினர் பிடியிலிருந்து எமக்கு கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.*

# இராணுவம் எமது நிலத்தில் விளைவித்து எங்களிடமே விற்பனை செய்கின்றது!



**வி. பரமசாமி, வலி. வடக்கு**

*1990ஆம் ஆண்டு இந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்று 32 வருடங்கள் ஆகிவிட்டன. இத்தனை வருடங்களையும் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் நானும் எமது உறவுகளும் வசித்து பல்வேறு இன்னல்களை - துன்பங்களை எதிர்கொண்டு வருகிறோம். இதை கேட்பதற்கு - அழுத்தம் கொடுக்க யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை.*

*இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் 32 வருட காலமாக எமது விவசாய நிலங்களை கையகப்படுத்தி உள்ளார்கள். எமது விவசாய நிலங்களில் தாங்கள் விவசாயத்தில் செய்து எங்களிடமே கொண்டு வந்து விற்பனை செய்கின்றார்கள். இந்த அவல நிலை எந்த நாட்டில் உள்ளது?*

*எமக்கு நிலம் இருந்தும் எமது நிலத்தில் சிங்கள இராணுவத்தினர் விவசாயம் செய்வதற்கு இந்த அரசாங்கம் துணை போகின்றது இதனை கேட்பதற்கு யாரும் இல்லை என்ற நிலைமையே காணப்படுகின்றது.*

# என்னுடைய காணிக்குள்ளேயே என்னையே விடுகிறார்கள் இல்லை

**நவரத்தினம் பராசக்தி, வசாவிளான்**



எமக்கு சொந்த காணிகள் அனைத்தும் பாதுகாப்பு பிரிவினரிடம் உள்ளது நாங்கள் விவசாயத்தைக் கொண்டுதான் நமது வாழ்வாதாரதத்தை மேற்கொண்டோம். இராணுவத்தினருடன் இணைந்து நாங்கள் அந்தக் காலத்தில் விவசாயத்தை மேற்கொண்டு வெங்காயம் போன்ற விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்தோம். ஆனால், தற்போது அவ்வாறு இல்லை எமக்கு இராணுவத்தினர் விலை கூறுகின்றார்கள்.

நாங்கள் விவசாயம் செய்து வாழ்ந்த இடத்தில் இன்று சிங்கள இராணுவம் எமக்கு கைகாட்டுகின்ற நிலைமை உள்ளது. எமது விவசாய நிலங்களில் இராணுவத்தினர் விவசாயத்தை மேற்கொண்டு விட்டு அவர்கள் கூறும் விலைக்கு நாங்கள் விவசாய பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

நாங்கள் சொந்தமாக விவசாயம் மேற்கொண்டுதான் நமது வீடுகளையே கட்டினோம். ஆனால், இன்று நாங்கள் ஒன்றுக்கும் வழியில்லாத நிலையில் இருக்கிறோம். எமது உறவினர்கள் அனைவரின் காணிகளும் இராணுவத்தினரின் பிடியில் உள்ளது. எனது - எங்கள் உறவுகளின் 30 பரப்புக்கும் மேற்பட்ட காணிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன.

இந்த காணிகளை எமக்கு தந்தால் நாங்கள் சுயமாக விவசாயத்தை மேற்கொண்டு நாங்கள் முன்னேற முடியும். ஆனால், இன்று எம்மிடம் கையிலும் பணம் இல்லை. சொந்த காணி இருந்தும் காணிக்கு செல்ல முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

சிங்கள இராணுவத்தினர் அந்த இடங்களில் எமது நிலங்களில் தமக்கு விவசாயதை மேற்கொண்டு மரக்கறிகளை கொண்டு வந்து எங்களிடமே விற்று செல்கின்றார்கள் இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

# எங்களுக்கு அளித்த வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்!



**சி. கந்தசாமி, காங்கேசன்துறை**

*நான் காங்கேசன்துறையில் திருமணம் முடித்தவன். வலி. வடக்கில் ஒரு மாடி வீடு கட்டி மிகவும் வசதியாக இருந்தேன் - எனது குடும்பம் 1987ஆம் ஆண்டு வரை வாழ்ந்த வீடு தரைமட்ட மாக்கப்பட்டுள்ளது.*

*அந்தக் காலத்தில் காங்கேசன்துறையில் இருந்து சகல இடங்களுக்கு சென்று மிகவும் சுதந்திரமாக வசித்து வந்த தமிழர்கள் இன்று மிகவும் இக்கட்டான நிலையில் வாழ்கின்றார்கள். சிங்கள இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற நிலை காணப்படுகின்றது.*

*இப்போது காங்கேசன்துறையில் இருந்து இன்னோர் இடத்துக்கு போவது என்றால் சுற்றிப் போக வேண்டிய நிலை உள்ளது. நாங்கள் சுதந்தி ரமாக வழிபட்ட கோயில்கள் இன்று பாழடைந்து கிடக்கின்றன. தமிழர்கள் ஆண்டு வந்த பூமியிலே இன்று எங்களை ஆள நினைகின்றார்கள்.*

*எமது நிலத்தில் இன்று எமக்கு இடமில்லை எனக் கூறுகின்றார்கள். வீடு கட்டுவதற்குக்கூட 60 இலட்சம் ரூபாய் வேணும். ரணில் ஐயா தன்னுடைய வீடு கொளுத்தியவுடன் வீடு இல்லாதவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்று கேட்டார். இதே ரணில் விக்கிரமசிங்க 2013ஆம் ஆண்டு தெல்லிப் பழையில் இடம்பெற்ற உண்ணாவிரத போராட்டத்தின்போது கலந்து கொண்டு உண்ணாவிரத்தில் கலந்துகொண்டு நான் ஆட்சிக்கு வந்தால் எல்லாம் செய்வார் என கூறினார்.*

*ஆனால், தற்போது அவர் ஜனாதிபதி ஆகி விட்டார். ஆனால், அவர் ஒன்றுமே செய்யவில்லை. சொந்த மண்ணில் தமிழ் மக்களின் காணிகள் வீடுகளை அழித்து - எமது காணிகளை பார்க்கக்கூட விடுகிறார்கள் இல்லை.*

*தமிழர்கள் வாழ வேண்டிய இந்த பிரதேசத்தில் சிங்களவர்கள் இருந்து கொண்டு எங்களை வாழ விடுகிறார்கள் இல்லை. இந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் எனக்கு 12பரப்பு காணி இருக்கிறது. அங்கு போக முடியாதவாறு புத்தர் சிலை ஒன்றை வைத்துள்ளார்கள். அந்த புத்தர் சிலையை வைத்துவிட்டு எங்களை அந்த பக்கம் போகக்கூடாது என கூறுகின்றார்கள்*

*எனக்கு காணி இருக்கின்றது. ஆனால், எங்களால் அந்த காணிக்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. நாங்கள் வாழ்ந்த பூமியில் எங்களை வாழ விடுமாறு இந்த அரசாங்கத்தை கோருகிறோம்.*

# நிலைமாறு அரசியலில் தடுமாறும் தலைகள்!

**பனங்காட்டான்**


இலங்கையின் 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மார்க்ஸிஸ கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சியமைத்து, புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாட்டை குடியரசாக மாற்றியது.

151 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 17ஐ மட்டும் இத்தேர்தலில் பெற்ற ஐக்கிய தேசிய கட்சி, 1977 பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையில் வெற்றிபெற்று, அதன் தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை முதலில் பிரதமராக்கி, அடுத்தாண்டில் அரசியலமைப்பு திருத்தத்தினூடாக முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக்கியது.

1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியை படுதோல்வியடையச் செய்வதற்கு, முக்கிய காரணியாக அமைந்தது ஒரு புத்தகம். மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்ட இந்தப் புத்தகத்தின் பெயர் ஷகுடும்ப மரம்; (Family Tree).

அவ்வேளை ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகமொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த கலாநிதி விக்கிரமவீரசூரிய என்பவரே இந்தப் புத்தகத்தை உருவாக்கியவர். ஜே.ஆரின் அமைச்சரவையில் முக்கியமானவராக இருந்த காமினி திசநாயக்கவின் மைத்துனர் இவர்.

1970-1977 சிறிமாவோவின் ஆட்சிக்காலப்பகுதியில் பல அரசியல் பதவிகளை வகித்த சுமார் 140க்கும் அதிகமான அவரின் உறவினர்களின் படங்கள், உறவு முறை, வகித்த பதவிகள், சுயவிபரங்களை உள்ளடக்கியதாக அரசியல் தேவையை ஒட்டி இப்புத்தகம் தயாரிக்கப்பட்டது. இதன் முகப்பு அட்டையில் சிறிமாவோவை ஒரு மரமாகச் சித்தரித்து அதன் ஒவ்வொரு இலைகளிலும் அரசியல் பதவிகளை வகித்த உறவினர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டு தேர்தல் காலத்தில் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.



மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சிக்காலத்தில் இவ்வாறான புத்தகமொன்றை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டிருப்பாரானால், முகப்பு அட்டையில் இருநூறுக்கும் அதிகமான ராஜபக்ச குடும்பத்தினரின் படங்கள் இடம்பெற்றிருக்கும். ஜே.ஆரின் வாரிசாக இருந்தும் ரணிலுக்கு ஏனோ இந்தச் சிந்தனை தேர்தல் காலங்களில் வரவில்லை.

காலம் பிந்தினாலும் இப்போது அதிர்ஸ்டமாகக் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை இறுகப் பற்றியவாறு ராஜபக்ச குடும்பத்தை அடியோடு அரசியலிலிருந்து அகற்றும் வேலையை அட்டகாசமாகவோ ஆர்ப்பாட்டமாகவோ இல்லாமல் அவர் ஆரம்பித்துள்ளதை காணமுடிகிறது.

காலிமுகத்திடலை மையப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட மக்கள் புரட்சி மகிந்தவை பிரதமர் பதவி துறந்து திருமலைக்கு ஓடச் செய்தது. பசில் ராஜபக்சவை சகல பதவிகளையும் இழந்து வீடேக வைத்தது, மகிந்தவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ச, மூத்த சகோதரர் சமல் ராஜபக்ச, அவரது புதல்வர் சசீந்திர ராஜபக்ச ஆகியோரையும் அமைச்சர் பதவிகளை இழக்க வைத்தது. இறுதியில் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதிக் கதிரையிலிருந்து இறக்கியதோடு நாடோடியாகவும் திரியச் செய்தது.



அறகலய என்ற மக்கள் பேரெழுச்சியின் பின்னால் ரணில் மட்டுமல்ல நாமல் ராஜபக்சவும் இருந்துள்ளது இப்போது அம்பலமாகியுள்ளது. இப்பேரெழுச்சியின் காரணமாக மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்டு விட்டது என்று பிரகடனம் செய்யும் ரணில், இன்னொரு மாற்றத்துக்கு இடமளிக்கத் தயாரில்லை. எதிரணிகளை பலவீனப் படுத்துவதன் மூலம் தமது அணியைப் பலமாக்கும் இவரது சூத்திரம், நிலைமாறு அரசியலில் பல தலைகளை தடுமாற வைக்கிறது.

ரணில் ஜனாதிபதியாகி ஆறு மாதங்களுக்கிடையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசியலில் பாரிய பின்னடைவை சந்தித்து வருகின்றன. ரணிலை ஆதரிக்கும் மகிந்தவின் பொதுஜன பெரமுன மூன்றாகப் பிளவுபட்டுள்ளது. சஜித் பிரேமதாச அணியினர் உதிரிகளாகக் கழன்று ரணிலுக்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மகிந்த ராஜபக்ச அரசியலிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக ஒரு செய்தி ஊடகங்களில் முதன்மையாக இடம்பெறுகிறது. ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக தம்மை நியமிக்கவில்லையென நாமல் ராஜபக்ச பொதுமக்களுக்கு அறிவிக்கிறார். பொதுஜன பெரமுனவின் ஒரு பகுதியினர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பொதுத் தேர்தலை சந்திக்க விரும்புவதாக இன்னொரு செய்தி. படிக்கும்போது இவை வெறுமனே செய்திகளாகக் காணப்பட்டாலும், அடிப்படையில் இவை ஒரு விடயத்தைத் தெரிவிக்கின்றன. மகிந்த ராஜபக்சவின் அரசியல் அஸ்தமனம் அவர் கண்முன்னால் தெரியவந்துள்ளது.

தமது புதல்வர் நாமல் ஜனாதிபதியாகும் வயது (பக்குவம் அல்ல) வரும் வரை தமது குடும்பத்தின் ஆளுகையில் ஜனாதிபதிப் பதவியை வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவே, அரசியலில் பூஜ்ய அனுபவம் கொண்ட கோட்டாபயவை ஜனாதிபதியாக்கினார் மகிந்த. ஆனால் அதுவே வினையாகி முழுக்குடும்பத்தையும் அரசியலில் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மகிந்த மூன்றாவது முறையும் ஜனாதிபதியாக விரும்பியதுதான் இன்றைய பாதகநிலைக்கு முக்கிய காரணமென்று பகிரங்கமாகக் கூறியுள்ளார் குடும்பத்தின் மூத்தவரான சாமல் ராஜபக்ச. அதுமட்டுமன்றி, பசில் ராஜபக்சவை மீண்டும் அரசியலுக்குள் இழுக்க வேண்டாமென்று அவரது ஷஅடியவர்களுக்கு எச்சரிக்கை கலந்த ஆலோசனையும் வழங்கியுள்ளார் சாமல்.

கோதபாயவுக்கெதிராக உருவாகி அவரை பதவியிழக்கச் செய்த பேரெழுச்சியில் நாமல் ராஜபக்சவுக்கும் பங்குண்டு என்பதை ஊடகங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளன. கோட்டாபய ஜனாதிபதியாகத் தொடருவாரானால் அதனால் தங்கள் குடும்பத்துக்கு ஏற்படும் பாதிப்பு தமது ஜனாதிபதி ஆசையை நிர்மூலமாக்கும் என்ற அச்சத்தில் தமது ஆதரவாளர்களை காலிமுகத்திடல் போராட்டத்தில் நாமல் ராஜபக்ச இணைத்ததாக பொதுஜன பெரமுனவின் உள்வீட்டிலிருந்தே உண்மை வெளிவந்துள்ளது.



மொத்தத்தில் பார்க்கப் போனால், ராஜபக்ச சகோதரர்களும் அவர்களின் குடும்ப உறவுகளும் இனிமேல் மனமொத்த எந்த அரசியல் வேலைகளையும் முன்னெடுக்க முடியாத நிலைமை மேலோங்கி வருகிறது. நாமலின் எதிர்காலத்தைச் சாதகமாக்கவென மகிந்த முன்னெடுத்துவரும் ஷமீண்டும் எழுவோம்; பேரணியும் பிசுபிசுத்துள்ளது. களுத்துறையிலும் கண்டியிலும் புத்தளத்திலும் இந்த எழுச்சிக் கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்கள் ஊழல் பேர்வழிகள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள். இதன் காரணமாகவே இதன் ஏற்பாட்டாளர்களான ரோகண அபயகுணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, சனத் நிஷாந்த ஆகியோரை அமைச்சர்களாக நியமிக்க முடியாதென ரணில் தொடர்ந்து மறுத்து வருகிறார். இவர்களோடு நாமலுக்கும் அமைச்சரவை கதவை திறப்பதற்கு மகிந்த இணக்கமில்லை.

ரணிலின் பொதுவான அரசியல் பண்பு பற்றி எல்லோரும் கூறிக்கொள்வது ஒன்றுதான். தமது தலைமையிலான அணியை அல்லது தமது கட்சியை பலப்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுவதைவிட, எதிர்தரப்பினரை பலவீனப்படுத்துவதன் வழியாகவே தமது தரப்பை இலகுவாக பலமாக்கிக் கொள்பவர் இவர். இது ஒருவகை அரசியல் சூத்திரம்.

1970ல் மூன்றிலிரண்டு பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய சிறிமாவோ அணியிலிருந்த மார்க்ஸிஸவாதிகளான 25 எம்.பிக்களை (சமசமாஜ கட்சி - 16, கம்யூனிஸ்ட் கட்சி - 9) சுதந்திரக்கட்சியின் ஒரு தரப்பினரை தம் வசமாக்கி அதனூடாக அவர்களை வெளியேற்றி, 1977 தேர்தலில் சிறிமாவோ அணியை தலைகுப்புற வீழ்த்தியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன என்பதை இப்போது பலரும் மறந்திருக்கலாம்.

இந்த மாதம் 3ம் திகதி கொழும்பில் பாரிய போராட்டமொன்று அரசுக்கு எதிராக இடம்பெற்றது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, "மக்கள் விரும்பிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இனியும் ஏன் போராட்டம்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதன் மூலம் அவர் எதனைச் சொல்ல வருகிறார்?



"மக்கள் பேரெழுச்சி ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பவே இடம் பெற்றது. அது நிறைவேறி விட்டது" என்பதை நேரடியாகவே சொல்கிறார். போராட்டம் இடம்பெற்றபோது அவர்களுடன் நெருக்கமாக இருந்தவர் - அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தவர் ரணில். விரும்பிய மாற்றம் போராட்டத்தினூடாக நிறைவேறி விட்டது என்பதையே தமது கேள்வியின் வாயிலாக அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் நிரந்தரமானதாக, தமது தலைமையிலான அணியை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். இலங்கையின் அரசியல் எதிர்காலமென்பது வேறெந்தத் தரப்புக்கும் மாறக்கூடாது என்பதே அவரது விருப்பு. அதற்காக நிலைமாறு அரசியலில் தலைகளைத் தடுமாற வைப்பது அவரது இலக்கு. இது அவருக்கு கைவந்த அரசியல் கலை.

# இலங்கைக்கு தேவை ஒரு ஒபாமாவோ சுனக்கோ அல்ல!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



எப்போதுமே பாரம்பரிய நடைமுறைகளை பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கின்ற பிரிட்டனில் பழமைவாத சிந்தனைகளைக் கொண்டதாக கருதப்படும் கன்சர்வேட்டிவ் கட்சி இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கை பிரதமராக தெரிவு செய்தமை புதிய காற்றைச் சுவாசிப்பது போன்று இருப்பதாகவும் ஒவ்வொரு குடிமகனும் சமத்துவமான உரிமைகளைக் கொண்டிருப்பதற்கும் இனம், நிறம் மற்றும் மதம் எல்லாவற்றையும் கடந்து அரசியல் உயர் பதவிகளுக்கு வருவதற்கு சமத்துவமான வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதற்கும் ஏனைய உலக நாடுகளுக்கு இது ஒரு பிரகாசமான உதாரணமாக இருப்பதாகவும் அரசியல் அவதானிகளும் ஊடகங்களும் கருத்து வெளியிட்டுக்கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

குறுகிய இன, மத பாகுபாட்டு சிந்தனைகளை கைவிட்டு சகல குடிமக்களுக்கும் அவர்களுக்கு உரித்தான இடத்தை உலக நாடுகள் வழங்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாகும். உண்மையில் இது மகத்தான ஒரு இலட்சியமே.

இந்திய வம்சாவளி சுனக் வெள்ளையினத்தவர்களை 80 சதவீதத்தினராகக் கொண்ட கிறிஸ்தவ நாட்டில் பிரதமராக வரமுடிந்ததைப் போன்று இந்தியாவில் நேரு குடும்பத்தில் திருமணம் செய்துகொண்ட இத்தாலிய பெண்மணியான சோனியா காந்தியினால் வரமுடியாமல் போய்விட்டதே என்ற தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி காங்கிரஸ் தலைவர்கள் சிலர் வெளியிட்ட கருத்துக்களும் வாதப்பிரதி வாதங்களை மூளவைத்தன.

அதே போன்று இலங்கையிலும் பௌத்த சிங்களவர் அல்லாத ஒருவரினால் ஏன் அரசியல் உயர்பதவிக்கு வரமுடியாது என்று கேள்வியெழுப்பி அரசியல் ஆய்வாளர்கள் சிலர் கருத்துக்களை வெளியிடுவதையும் சில ஆங்கில பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்களை கூட தீட்டுவதையும் காண்கிறோம்.

இவையெல்லாம் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பிறகு சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் தொடர்பில் மும்முரமாகப் பேசப்பட்ட வேளையில் ஆகஸ்ட் நடுப்பகுதியில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் எம்.பி.யான திலான் பெரேரா பாராளுமன்றத்தில் தெரிவித்த யோசனையொன்றை நினைவுக்கு கொண்டுவருகின்றன.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றின் கீழ் பிரதமராக தமிழர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் அமைச்சரவை இனவிகிதாசாரப்படி அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். இவ்வாறு செய்வதன் மூலம் இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் நல்ல மதிப்பு ஏற்படும்.

அதனால் பல அனுகூலங்களை நாடு பெறமுடியும் என்று குறிப்பிட்ட பெரேரா," தமிழர் ஒருவரை பிரதமராகவும் முஸ்லிம் ஒருவரை சபை முதல்வராகவும் நியமிப்பதில் என்ன தவறு இருக்கிறது? நாம் சிங்கள பௌத்த ஜனாதிபதியைக் கொண்டிருக்கலாம். இந்த நியமனங்களை செயதால் உலகிற்கு நேர்மறையான சமிக்ஞை ஒன்றை காட்டமுடியும். அறகலய போராட்டம் மூலம் தீவிரவாதப்போக்கு தகர்க்கப்பட்டு விட்டது" என்று கூறினார்.

திலான் பெரேரா தான்தோன்றித்தனமாக பேசும் ஒரு அரசியல்வாதி என்று அடையாளம் காணப்பட்டவர் என்ற போதிலும், அவரின் இந்த யோசனையை வரவேற்காமல் இருப்பதற்கு காரணமில்லை. அந்த யோசனை குறித்து ஆசிரிய தலையங்கம் தீட்டிய " டெயிலி நியூஸ் " பத்திரிகை இதற்கு முன்னர் இலங்கையில் தமிழர் ஒருவர் பிரதமராக இருந்திருந்தால் 1983 கறுப்பு ஜூலை இன வன்செயல்களோ சுமார் மூன்று தசாப்தகாலம் நீடித்த பிரிவினைவாத போரோ இடம்



இலங்கையிலும் பௌத்த சிங்களவர் அல்லாத ஒருவரினால் ஏன் அரசியல் உயர்பதவிக்கு வரமுடியாது என்று கேள்வியெழுப்பி அரசியல் ஆய்வாளர்கள் சிலர் கருத்துக்களை வெளியிடுவதையும் சில ஆங்கில பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்களை கூட தீட்டுவதையும் காண்கிறோம்.



பெற்றிருக்காது என்று குறிப்பிட்டது.

வெள்ளையரும் கிறிஸ்தவருமல்லாத இந்திய வம்சாவளி குடியேற்றவாசி பெற்றோர்களின் ஒரு மகனை பிரதமராக ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு பிரிட்டனின் அரசியல் முறைமை நேர்மறையான ஒரு பரிணாம வளர்ச்சியைக் கண்டிருப்பதன் ஒரு உறுதிச்சான்றாக சுனக்கின் உயர்வை நோக்கவேண்டும். அத்தகைய ஒரு மாற்றம் இலங்கையின் அரசியல் முறைமையில் ஏற்படுவதற்கான எந்த அறிகுறியையும் காணக்கூடியதாக இருக்கிறதா? என்னதான் எமது நாட்டை "இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு" என்று அழைத்தாலும் அந்த அரசு



அடிப்படையில் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையின் மேல்தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் ஐக்கியம், இறைமை, சுயாதிபத்தியம் என்பவற்றை ஆட்சியதிகாரக் கட்டமைப்பு மீதான சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்கு அப்பால் வேறு எதுவுமாக சாதாரண சிங்கள மக்கள் விளங்கி வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. அந்த மேலாதிக்கத்தை தகர்க்கக்கூடிய பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படாத பட்சத்தில் இலங்கையில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் முக்கியமான அரசியல் உயர்பதவிகளுக்கு வருவது குறித்து மாத்திரமல்ல இனப்பிரச்சினைக்கு உருப்படியான அரசியல் தீர்வொன்றைக் காண்பது குறித்தும் கனவிலும் நினைக்கமுடியாது.

கடந்த நூற்றாண்டில் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக இருந்தவேளையில் அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் அரசாங்க தரப்பினரால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்துவது பொருத்தமானது. பாராளுமன்ற அரசியலில் எதிர்க்கட்சி தலைவர் மீது என்றைக்குத்தான் அரசாங்கத்துக்கு நம்பிக்கை இருந்ததோ நாமறியோம்.

சிங்கள தலைவர்களுடன் சேர்ந்து ஒரே அரசியல் இயக்கத்தை தாபித்த தமிழ் தலைவர்கள் கூட இனவாத அடிப்படையில் ஓரங்கட்டப்பட்ட அனுபவம் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே தமிழர்களுக்கு இருக்கிறது.

இலங்கை சிவில் சேவையில் இணைந்துகொண்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமைக்குரிய சேர் பொன் அருணாச்சலம் 1913 அந்த சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் அரசியலில் ஆர்வம் காட்டினார். 1917 இலங்கை தேசிய சங்கம், இலங்கை சீர்திருத்தக் கழகம் என்ற அமைப்புக்களை தாபித்து அவற்றின் தலைவராக இருந்த அவர் 1919 இலங்கை தேசிய காங்கிரஸை தாபித்த தலைவர்களில் ஒருவர். அதன் முதலாவது தலைவரும் அவரே.

இலங்கை சட்டப்பேரவையின் (Legislative Council) உறுப்பினராகவும் இருந்த அருணாச்சலம் ஒரு வருடத்துக்கும் மேலாக தேசிய காங்கிரஸின் தலைவராக இருக்கமுடியவில்லை. சட்டப்பேரவையில் இனரீதியான பிரதிநிதித்துவம் தொடர்பாக மூண்ட பிரச்சினையை அடுத்து அவர் தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறினார். இனரீதியான பிரதிநிதித்துவ முறையை அவர் முற்றுமுழுதாக எதிர்த்தார்.

சிங்கள தலைவர்களின் ஒத்துழைப்புடன் கொண்டுவரப்பட்ட அந்த பிரதிநிதித்துவ முறை காரணமாக 1921 சட்டப்பேரவைக்கு மேல் மாகாணத்தில் இருந்து தமிழர் ஒருவரை தெரிவு செய்ய முடியாமல் போய் விட்டது. பிறகு அருணாச்சலம் 1923 இலங்கை தமிழர் கழகம் (Ceylon Tamil League) என்ற அமைப்பை தொடங்கினார். சிங்கள தலைவர்களுடன் சேர்ந்து அரசியல் இயக்கத்தை ஆரம்பித்த தமிழ் தலைவருக்கு அந்த இயக்கத்தின் தலைமைத்துவ மட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினை தேசிய இயக்கங்களில் தமிழ் தலைவர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முந்திய உதாரணமாகும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியின் ஒரு உதாரணமாக காலஞ்சென்ற வெளியுறவு அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்கொண்ட முயற்சிக்கு நேர்ந்த கதியை கூறலாம்.

2004 பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான பொதுஜன பெரமுன ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வுடன் சேர்ந்து அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றது. கதிர்காமரை பிரதமராக நியமிக்கவேண்டும் என்ற யோசனை உண்மையில் ஜே.வி.பி.யினரால்தான் முன்வைக்கப்பட்டது. புதிய அரசாங்கத்தின் பிரதமராக மகிந்த ராஜபக்சவை நியமிக்கவேண்டும் என்று விரும்பிய குழுவினரின் நடவடிக்கைகளினால் அந்த யோசனை நடைமுறைச் சாத்தியமாகவில்லை.

தனக்கு பிரதமர் பதவி தரப்படாவிட்டால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சியுடன் இணையப்போவதாகக் கூட ராஜபக்ச அச்சுறுத்தினார். அவருக்கு ஆதரவாக சிங்கள பௌத்த அமைப்புக்களும் குரல் கொடுத்தன. மகிந்தவை பிரதமராக நியமிப்பதை தவிர திருமதி குமாரதுங்கவுக்கு வேறு வழி இருக்கவில்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



# இறங்கி வந்த கீர்த்தி

கவர்ச்சியாக நடிக்க மாட்டேன் என்று மறுத்து வந்த கீர்த்தி சுரேஷ் தனது கொள்கையிலிருந்து கீழிறங்கி வந்துள்ளார்.

தனது பாத்திரத்துக்கு முக்கியத்துமளிக்கும் கதைகளை தெரிவு செய்து நடித்து வந்தார் கீர்த்தி சுரேஷ். அந்தப் படங்கள் தொடர் தோல்வியை தழுவவே வணிக ரீதியான படங்களும் அவரை ஒப்பந்தம் செய்யவில்லை.

இந்நிலையில், கொள்கையிலிருந்து கீழிறங்கியதை தெரிவிக்கும்முகமாக கவர்ச்சிப் படங்களை வெளியிட்டு வருகிறார் கீர்த்தி.

# இலாபத்தால் வரும் படம்

கார்த்தி நடித்த 'தேவ்' படத்தின் மூலம் நட்டமடைந்த தயாரிப்பு நிறுவனம் 'சர்தார்' மூலம் இலாபம் பார்த்திருக்கிறது. விநியோகஸ்தர்களுக்கான நஷ்டத்தைச் சமீபத்தில் சரிசெய்துள்ள தயாரிப்பாளர் லக்ஷ்மன், அடுத்து சசிகுமார் நடிப்பில் உருவாகியிருக்கும் 'காரி' படத்தை வெளியீடு செய்கிறார்.

# மம்முட்டி - விஜய் சேதுபதி



தமிழ் திரையுலகில் முன்னணி கதாநாயகனாக மற்ற நடிகர்களுடன் இணைந்தும் நடித்து வருகிறார்.

ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய் ஆகியோர் படங்களில் நடித்தவர் தற்போது வெற்றி மாறன் இயக்கத்தில் சூரியுடன் விடுதலை படத்தில் நடித்து வருகிறார். ஹிந்தியில் சாருகானின் ஜவான் படத்தில் வில்லனாக நடிக்கிறார்.

இந்த நிலையில் அடுத்து புதிய படமொன்றில் மம்முட்டியும் விஜய்சேதுபதியும் இணைந்து நடிக்கவுள்ளனர். இந்த படம் தமிழ், தெலுங்கு ஆகிய 2 மொழிகளில் தயாராகவுள்ளது.

# விஜயின் அடுத்த படம்



விஜயின் அடுத்த படத்தை இயக்கப்போவது லோகேஷ் கனகராஜ் என்பது உறுதியான செய்தி. அதைத் தயாரிக்கப் போவது யார்என்பது இப்போது வரை வெளியாக வில்லை.

இந்த நிலையில் 'வாரிசு' படத்தின் தமிழ்நாடு உரிமையை தயாரிப்பாளர் லலித் கையில் விஜய் ஒப்படைத்திருக்கிறார். அடுத்த படத்தை தயாரிக்கப்போவதும் அவரே தான் என்பது உறுதியாகி விட்டது. விஜயின் படங்களுக்கு, சமீபகாலமாக டிஜிற்றல் உரிமை பேரம் எக்கச்சக்கமாக எகிறுவதால், லலித்திடம் அதையே சம்பளமாகப் பேசுகிற திட்டத்தில் இருக்கிறாராம் விஜய்.

# கைதியில் அமலாபால்

கார்த்தி நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான படம் கைதி. இந்த திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்தப் படம் கைதி ஹிந்தியில் "போலோ" என்ற தலைப்பில் உருவாகி வருகிறது. இதில் கார்த்தி கதாபாத்திரத்தில் பிரபல நடிகர் அஜய் தேவ்கான் நடிக்கிறார். இந்தப் படத்தில் நடிகை அமலாபால் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார்.



# லொஸ்லியாவின் புதிய படம்

சி. எஸ். கே. படத்தைத் தொடர்ந்து எஸ். சத்திய மூர்த்தி பேய்ப் படம் ஒன்றை இயக்குகிறார்.

இந்தப் படத்தில் லொஸ்லியா, முனிஸ்காந்த், பூர்ணேஷ்ஆகியோர் நடிக்கின்றனர்.

இன்னமும் பெயரிடப் படாத இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது. மர்ம கை ஒன்று ஏற்படுத்தும் பிரச்னைகளே படத்தின் மையக் கதையாம்.









**திரைப்படம் - நித்தம் ஒரு வானம்**
**இயக்கம் - ரா கார்த்திக்**
**இசை - கோபி சுந்தர்**
**நடிப்பு - அசோக் செல்வன், ரித்து வர்மா, அபர்ணா பாலமுரளி, ஷிவாத்மிகா ராஜசேகர்**

படத்தின் தலைப்பைப் பார்த்ததும் இது ஒரு காதல் கதை என்று நினைப்போம். ஆனால், காதலை விடவும் ஒரு தனி மனிதன் தன் வாழ்க்கையை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று பாடம் எடுக்கும் ஒரு படம்.

ஐ. ரி. நிறுவனத்தில் வேலை பார்ப்பவர் அசோக் செல்வன். சுத்தமாக இருக்க வேண்டும், எதுவும் ஒழுங்காக இருக்க வேண்டும், எதையும் முறையாகச் செய்ய வேண்டும் என்ற குணம் கொண்டவர். வீட்டில் இருக்கும் நாயைக்கூடத் தொடாதவர். அப்படிப்பட்டவருக்கு திருமணம் நிச்சயமாகி திருமணத்தன்று அதிகாலையில் மணப் பெண் அவரின் காதலனுடன் செல்கிறேன் எனச் சொல்லிவிட்டுச் செல்கிறார்.

அசோக் செல்வனின் மருத்துவரான அபிராமி, அசோக்கிடம் அவர் எழுதிய சிறுகதைகளைக் கொடுத்து படிக்கச் சொல்கிறார். ஆனால், அந்தக் கதைகளில் முடிவுகள் கிழிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பேராவலில் அபிராமியிடம் அதைப் பற்றிக் கேட்க. அவை கதை அல்ல, உண்மை, அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ள அவர்களைத் தேடிப் போ என முகவரிகளைக் கொடுக்கிறார். அசோக்கும் அவர்களைப் பார்க்க செல்கிறார். அதன்பின் அந்தப் பயணத்தில் அவர் என்ன அனுபவங்களைக் கற்றுக் கொள்கிறார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

சிறு வயதிலிருந்தே எந்த கதை புத்தகத்தைப் படித்தாலும் அதில் வரும் கதாநாயகர்களாகத் தன்னையே நினைத்துக் கொள்பவர் அசோக். மருத்துவர் அபிராமி கொடுத்த சிறுகதைகளில் உள்ள இரண்டு கதைகளின் கதாநாயகர்களாக தன்னையே நினைத்துக் கொள்கிறார். அதில் ஒருவர் பொறியியல் கல்லூரி மாணவர் வீரா கதாபாத்திரம். அக்கதாபாத்திரத்தில் "மௌனராகம், இதய தாமரை" கார்த்திக்கை ஞாபகப் படுத்துகிறார் அசோக் செல்வன்.

இரண்டாவது கதையில் கொங்கு தமிழ் பேசும் பிரபா கதாபாத்திரம். நகைச்சுவை கதாபாத்திரம் கொடுத்தாலும் நடிப்பேன் என அக்கதாபாத்திரத்தில் புரிய வைக்கிறார். அந்தப் பிரபா யார் என்பது பிறகு தெரிய வரும்போது எதிர்பாராத திருப்பம். கதையில் படித்தவர்களை தேடிப் புறப்படும் அர்ஜுன் கதாபாத்திரம் என மூன்று விதமான கதாபாத்திரங்களிலும் தனித்தனியே முத்திரை பதித்திருக்கிறார் அசோக் செல்வன்.

முதல் சிறுகதையாக வரும் பொறியியல் கல்லூரி காதலில் வீராவின் காதலியாக மீனாட்சி கதாபாத்திரத்தில் ஷிவாத்மிகா ராஜசேகர். அப்படியே நம் பக்கத்து வீட்டுப் பெண்களில் ஒருவராகத் தெரிகிறார். அவர் பார்க்கும் காதல் பார்வையும், வீராமீது வரும் காதலுமாக கிடைத்த அரை மணி நேரத்தில் அசத்தியிருக்கிறார் ஷிவாத்மிகா.

படத்தின் மற்றோர் அசத்தல் அபர்ணா பாலமுரளி. கோவை பக்கம் கிராமங்களில் இப்படியும் ஒரு பெண் இருப்பாரா என்ற சந்தேகம் எழுந்தாலும், அந்த மதி கதாபாத்திரத்துக்கு தன் நடிப்பால் மதிப்பு கூட்டுகிறார் அபர்ணா.

அசோக்கின் பயணத்தில் பயணத் தோழியாக இணைகிறார் ரீத்து வர்மா. இருவரும் முதலில் கொஞ்சம் சண்டை போட்டுக் கொண்டாலும் போகப் போக மற்றவரைப் புரிந்து கொண்டு நெருக்கமாகிறார்கள். ரீத்து போல ஒரு தோழி கிடைத்தால் இக்கால இளைஞர்களுக்குக் கொண்டாட்டமாகவே இருக்கும்.

ஷிவாத்மிகா, அபர்ணா, ரீத்து என மூன்று கதாநாயகிகளுடனும் அப்படியே "அட்டாச்" ஆகிவிடுகிறார் அசோக் செல்வன்.

கோபி சுந்தர் பின்னணி இசையும், விது அய்யன்னா ஒளிப்பதிவும் படத்தின் தரத்தை மெருகூட்டியுள்ளன. இந்த மாதிரியான படங்களுக்கு பாடல்கள் பக்கபலமாக அமைய வேண்டும். அழகான பயணத்தில் அவை வேகத் தடைகளாக அமைந்துள்ளன.

படத்தின் ஆரம்ப காட்சிகள் படம் எதை நோக்கி நகர்கிறது எனத் தெரியாமல் நகர்கிறது. சில பல தேவையற்ற காட்சிகளுக்குப் பிறகுதான் கதைக்குள் அழைத்துச் செல்கிறார் இயக்குநர். உச்சக் காட்சிகள் நெகிழ்வு. மனதை எளிதாக்கும் மந்திரம் என்ன என்பதை புரிய வைக்கும் படம்.



# விராட் கோலி...!

## எல்லா காலத்துக்குமானவன்



நாடுகள் - மொழிகள் கடந்து கிரிக்கெட்டை நேசித்தவர்கள் உச்சரித் பெயர் சச்சின் டெண்டுல்கர். கிரிக்கெட்டை விரும்பியவர்கள் எல்லோரும் தங்களில் ஒருவராகவே சச்சினை ஏற்றுக் கொண்டார்கள்.

இன்று கிரிக்கெட் ஆடும் வீரர்களில் விராட் கோலியை அனைத்து ரசிகர்களும் கொண்டாடுகிறார்கள்.

இத்தகைய கோலியின் டெஸ்ட் களத்தின் பக்கங்கள் வெள்ளை நிறத்தால் அல்ல, வானவில்லின் வண்ணங்களால் ஆனவை. துடுப்பாட்ட வீரராக மட்டுமின்றி அணித் தலைவராகவும் - இந்திய அணியில் புதுமைகளையும், புரட்சிகளையும் புகுத்தியவர். ஒருநாள் போட்டிகளிலோ, இந்தியா தொலைத்துத் தேடிய சச்சினாகவே உருமாறி வந்தவர். அதற்கான வலுவான தரவுகளும் உண்டுதானே! ஆனால், இந்த மற்ற இரண்டு வடிவங்களின் முன்னால், கோலியின் இருபது -20 பக்கங்கள் சற்றே மறைக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில், இருபது -20இல் கோலி தொட்டிருக்கும் உச்சம், பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிச் சிலாகிக்கப்பட வேண்டிய ஒன்று!

மொத்தமாக 105 சர்வதேச இருபது -20 இனிங்ஸ்களில் களம் கண்டுள்ள கோலிக்கு, அதில் 4000 ஓட்டங்களை எட்ட இன்னமும் 68 ஓட்டங்கள் மட்டுமே தேவை. இதில் 36 அரைச்சதங்களை அடித்துள்ளார். அதாவது சராசரியாக மூன்று போட்டிகளுக்கு ஓர் அரைசதம் வந்து சேர்ந்துள்ளது. 300+ பௌண்ட்ரிகளையும், 100 சிக்ஸர்களையும் அடித்துள்ள நான்கே வீரர்களில் கோலியும் ஒருவர். சர்வதேச இருபது - 20இல் அதிக ஆட்டநாயகன் விருதை (15 முறை) வென்றிருப்பவரும் கோலி மட்டும் தான்.

மற்றவர்களைவிட கோலியின் இருபது - 20 உலகத்தில் அப்படி என்ன வித்தியாசம்? எது அவரை சிறப்பு அம்சமுடையவராக மாற்றுகிறது?

பொதுவாக, இருபது - 20 என்பது ஒவ்வொரு பந்திலும் ஓட்ட வேட்டை ஆடவேண்டிய களம். ஒவ்வொரு பந்தும் துடுப்பாட்ட வீரரின் பங்களிப்பைக் கேட்கும். உடல் வலுவையும், கைகள் - கண்கள் ஒருங்கிணைப்பையும் கோரும், விக்கெட்டைப் பாதுகாப்பது அவசியமென்றாலும் ஓட்ட சராசரியை உதை வாங்காமல் பார்ப்பது இன்னமும் அவசியம். அன்ஆர்தடாக்ஸ் ஷொட்களால் இனிங்ஸ் நிரப்பப்படுவது, வேரியஷன்களால் வேல் தொடுக்கும் பந்துவீச்சாளரிடமிருந்து பாதுகாப்பு வளையமிட உதவும். ஆனால், கோலியின் ஆட்டம் இந்த டி20 இலக்கணங்களை மீறியதாகவே இருக்கும்.

இயான் செப்பல் ஒருமுறை, “இருபது - 20இற்கு ஏற்றால் போன்ற ஷொட் களை ஆடக் கற்றுக் கொள்ளலாமே?!”, என கோலியிடம் கேட்டபோது, ”அது என்னுடைய டெஸ்ட் துடுப்பாட்ட தரத்தை குறைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கலாம், எனவே ஆர்தடாக்ஸ் ஷொட்களைக் கொண்டே, நான் இருபது - 20 போட்டியிலும் ஓட்டங்களைக் குவிக்க முயல்கிறேன்” என்று கூறியிருந்தார். உண்மையில் அதீத காதல் கொள்ளவைக்கும் அவரது கவர் டிரைவும் பின்வைத்த கால் அதிரடியும் மணிக்கட்டின் மாயம் காட்டும் பிளிக்கும் மனதைக் கொள்ளை அடிப்பவைதான். ஆனால், அவர் அடிக்கும் சிக்ஸர்கள்தான் அற்புதங்கள் நிறைந்தவை.

இதையும் தாண்டி, ரொம் மூடி சமீபத்தில் கூறியிருந்ததை போல் 99.99 வீத துடுப்பாட்ட வீரர்கள் செய்யத் தவறுவதை கோலி செய்கிறார். ஆட ஆரம்பித்து முதல் 20 - 25 பந்துகளில் வெறும் பந்துக்கு ஏற்ற ஓட்டம் என்ற கணக்கில் இனிங்ஸைத் தொடங்குவார். இது அவர் காலூன்ற எடுத்துக் கொள்ளும் நேரம். திரியில் பற்ற வைத்த தீ வெடிபொருளை எட்ட எடுக்கும் அதே கால அவகாசம்தான் அது.

அதற்குப்பின் ஓட்ட சராசரி சற்றே வேகமெடுக்கும். இறுதியிலோ எக்ஸ்பிரஸாக எங்கோ எகிறும். எவ்வளவு தவறவிட்டாரோ அவ்வள வுக்கும் சேர்த்து வசூலித்து விடுவார். ஐன்ஸ்டீன் ஒரு முறை, “எலிகள் தனக்கான பொறியை, தாங்களே தயார் படுத்திக் கொள்வதில்லை. மனிதர்களோ அணுகுண்டை உருவாக்குகிறார்கள்” என்று கூறினார். இது கோலி விஷயத்திலும் பொருந்தும். அவர் செட்டிலாக எடுத்துக் கொள்ளும் நேரத்திற்குள் அவரது விக்கெட்டை வீழ்த்தாவிட்டால், அது எதிரணி, தனக்குத் தானே வைத்துக் கொள்ளும் பொறிதான். ஏனெனில், இந்த மைண்ட் கேமில் பெரும்பாலும் வெல்வது கோலிதான். விக்கெட்களுக்கிடையே ஓடி, ஓர் ஓட்டத்தை இரண்டாக மாற்றுவது மட்டுமின்றி, பௌண்ட்ரிகளை சூறையாடுவது வரை அவருக்கு எல்லாமே அத்துப்படிதான்.

இருபது - 20 இல் பவர்பிளே ஓவர்கள், ஸ்பின்னர்கள் கோலோச்சும் மிடில் ஓவர்கள், டெத் ஓவர்கள் என எந்த நிலையென்றாலும் அவரது ஆதிக்கம் அதேபோலத்தான் இருந்திருக்கிறது. குறிப்பாக, துரத்தியடிக்கும் போட்டிகளில் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு பந்திலும் அணியின் வெற்றியை கோலியே பலமுறை முன்னெடுத்துச் சென்றிருக்கிறார். அதிலும் இருபது - 20 உலகக் கிண்ணங்களில் தனி ஆவர்த்தனமே நிகழ்த்தியிருக்கிறார்.

சமீபத்தில் நடைபெற்ற பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் இருபது - 20 உலகக் கிண்ண வரலாற்றில் அதிக ஓட்டங்களை அடித்த வீரர்கள் பட்டியலில் மகேல ஜெயவர்த்தனவைத் தாண்டி (1016 ஓட்டங்கள், 31 இனிங்ஸ்களில்), வெறும் 23 இனிங்ஸ்களில், 1065 ஓட்டங்களுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். இந்த 23 இனிங்ஸ்களில் 7 முறை ஆட்டநாயகன் விருதை வாங்கியுள்ளார். கோலி ஆடிய 23 போட்டிகளில் 16 இல் இந்தியா வென்றுள்ளது. அதில் 783 ஓட்டங்களை 130.50 சராசரியோடு, 10 அரைச்சதங்களோடும் கோலி அடித்துள்ளார். இந்தத் தரவு ஒன்றே சொல்லும், அணியின் வெற்றியில் அவரின் பங்கு எந்தளவு முக்கிய மானதாக இருத்திருக்கிறது என்பதை! மூன்றுக்கும் அதிகமான 50+ ஓட்டங் களை ஒரே சீசனில் 3 முறை அடித்த ஒரே வீரர் (2014, 2016, 2022) கோலி மட்டும்தான்.

ஆடும் திறனை இழந்ததாகச் சொல்லப்பட்ட கால கட்டங்களில்கூட, டெஸ்டில் வேண்டுமென்றால் அவரின் கொடி சற்றே தாழ்ந்து பறந்தது, சராசரி 50இற்குக் கீழே இறங்கியது. ஐ. பி. எல்லில் கூட அவரது ஆட்டத்தில் சற்றே காட்டம் குறைந்திருந்தது. ஆனால், சர்வதேச இருபது - 20 போட்டியில் எப்போதுமே அவர் நிலைப்புத் தன்மையோடே ஓட்டங்களை எடுத்துள்ளார். 53.13 என்னும் அவரின் சர்வதேச இருபது - 20 சராசரியே அதற்கு ஆதாரம். அதிலும் 2019இற்குப் பிந்தைய காலகட்டத்தில்தான் அவரின் இருபது -20 சிக்ஸர்களில் 116இல் 68 சிக்ஸர்கள் வந்துள்ளன. இது ஒன்றே சொல்லும் அவர் ஆட்டமிழந்து விடுவோமென அஞ்சிப் பின் வாங்கினாரா அல்லது அடங்காத காளையாகத் திமிறிநின்று முட்டி மோதினாரா என்று!

இந்தாண்டு டி20 உலகக் கிண்ண மும் கோலியின் வேட்டைக் களம் தான். அதுவும் அவருக்குப் பிடித்த மான அவுஸ்திரேலிய மண், முன்பிருந்த அதே தீயை அவருக்குள் மீண்டும் கொழுந்து விட்டு எரிய வைத்திருக் கிறது. ஆசியக் கோப்பைக்குப் பின்பே அவரின் ஓட்டம் அதிவேகமாக மாறியிருந்தது. இப்போதோ வேகத் தடையிட்டுக் கட்டுப்படுத்த முடியாதவாறு ஆகாயத்தை ஆரத்தழுவும் ஜெட்டாக ஓட்டங்களைக் குவிக்கிறார்.

கோலி உச்சக்கட்ட தகுதி யில் இருந்த 2016ஆம் ஆண் டில் 13 சர்வதேச இருபது - 20 போட்டிகளில் 641 ஓட்டங்களை குவித்திருந்தார். இப்போதோ கடைசி 14 போட்டிகளில் முன்னதைப் போலவே 624 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்திலோ 4 போட்டிகளில் 220 சராசரியோடு, 220 ஓட்டங்களைக் குவித்து, அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்திலேயே முகாமிட்டுள்ளார். ஆடிய நான்கு போட்டிகளில் மூன்று அரைச்சதம், இரண்டு ஆட்டநாயகன் விருது என அதகளப்படுத்துகிறார்.

34 வயது இளைஞராக ஒவ்வொரு விக்கெட்டின் போதும் அடுத்த முனையில் உள்ள பங்காளரி பௌண்ரியையும் சிக்ஸரையும் தன்னுடையதாக பாவித்துக் கொண்டாடும் அவரின் குணம், அவர் ஏன் அணியின் அச்சாணி என்பதைப் பறைசாற்றுகிறது.

கோலி உருவாக்கி வைத்திருந்த அவரது உச்சக்கட்ட அளவுகோல்தான் அவருக்கு எதிரியாக இருந்தது. ஏனெனில், மற்றவர்களின் அதிகபட்ச ஓட்டங்கள்தான் அவரின் குறைந்தபட்சமே. இதோ அவர் வைத்த அளவு கோலைத் தாண்டக் கூடியதாகத்தான் இந்த இரண்டாவது சுற்றையும் மாற்றி வருகிறார்.

2016இல் டோனி, ”அடிலெய்டில் ஒரு தரிப்பிடத்துக்கு கோலியின் பெயர் சூட்டப்பட வேண்டும். அந்தளவிற்கு அவர் இங்கே ஓட்டங்களை குவிக்கிறார்” என்று கூறியிருந்தார். அடிலெய்டில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த அவுஸ்திரேலியாவுமே அவரின் இரும்புக் கோட்டைதான். அதிக ஓட்டங்களான 3300 ஓட்டங்களை அவுஸ்திரேலியாவில் குவித்த இந்தியராக முன்னதாக சச்சின் இருக்க, அதை 3350 ஓட்டங்களோடு கோலி முந்தியிருக்கிறார். எல்லாக் காலத்திற்குமானவர் என நிரூபித்தும் வருகிறார்.

ஆக, டெஸ்ட், ஒருநாள் போட்டிகள், டி20 என முப்படைக்கும் அவர் தளபதிதான்.

இருபது - 20 உலகக் கிண்ண அணியிலேயே அவருக்கு இடமிருக்காது என்றெல்லாம் பேச்சுக்கள் எழுந்தன. காகங்களின் கருத்துகளால் கழுகின் சிறகுகள் பலவீனமடையவா போகின்றன?! அப்படி ஏசியவர்கள் அதே இடத்தில்தான் வட்டமிட்டுக் கொண்டுள்ளார்கள். அல்லது கியரை மாற்றி கோலியின் பக்கம் வந்துவிட்டனர். ஆனால் கோலியோ, அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என இந்த உலகக் கிண்ணத் தொடரையே தனது பெயரில் மாற்றி எழுதிக் கொண்டிருக்கிறார்.

புதைக்க நினைத்த இடத்தில், தவிர்க்க முடியாத சக்தியாக வடிவெடுத்து நிற்பதுதானே சாதனை?!



# எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்கள்!

## தென்கயிலை ஆதீன விஜயம்!

சித்தர்களுள் முதன்மையான திருமூலர் இலங்கையை சிவ பூமி என்று அழைத்தார்.

அவர் எழுதிய திருமந்திரத்தில் 2747 வது அடியில் இது கூறப்படுகிறது.

திருகோணமலையில் அடிக்கு ஒரு சிவலிங்கம் இருக்கின்ற பிரதேசம் என கேள்விப்பட்டு இருக்கிறோம்.

ஆம்.

பார்க்கும் இடமெல்லாம் சிவலிங்கங்கள் நிறைந்த சிவபூமியான திருகோணமலையில் கங்குவேலி மண்ணில் அகத்தியர் பெருமான் வந்து தவமியற்றி பல வேள்விகளை செய்து மாபெரும் சித்த மருந்துவ பல் கலைக்கழகம் உருவாக்கி, பல சீடர்களை உருவாக்கி சங்க தமிழ் வளர்ந்த புண்ணிய பூமி "அகத்தியர்-ஸ்தாபனம் உள்ளது .

அதேபோன்று

தமிழ் குறுமுனி அகத்தியர் போகர் தொடக்கம் 18 சித்தர்களின் திருவுருவச் சிலைகள் புடைசூழ 1008 லிங்கங்கள் பொறிக்கப்பட்ட பிரம்மாண்டமான சிவலிங்கம் அதனைச் சுற்றி தாரண நாகம் அமையப் பெற்ற பாபநாசர் சிவலிங்கேஸ்வரர் ஆலயத்தை தரிசித்ததும் மெய் சிலிர்த்தது.ஒருவித அதிர்வு ஏற்பட்டது.



அதேபோன்று இந்த தென் கயிலை ஆதீன புனித பூமி மிளிர்கிறது. இதனை அகத்தியர் பெருமான் இன்றும் முன்னின்று நடத்தி வருகிறார். சிவபூமி என்பதற்கு ஆதாரமாக இன்றும் திருகோணமலையிலே தென் கயிலை புனித பூமியிலே இருக்கின்ற சிவலிங்கங்களை கூறலாம்.

அண்மையில் அங்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் அங்கு சென்றனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி , மகேஸ்வரன் சுவாமி, கனடாவில் இருந்து இதனை நேரடியாக காண வேண்டும் என வருகைதந்த பிரபல ஆன்மீக பரோபகாரி அன்பர் குமார், காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான கே.ஜெயசிறில், வி.ரி.சகாதேவராஜா மற்றும் தமிழகரன் சனா ,சனுஸ்காந்த், பிரசானந்த் ஆகியோர் பயணத்தை மேற்கொண்டார்கள்.

### தென் கயிலை

அங்கு அகத்திய முனிவர் 1008 சிவலிங்கங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

திருகோணமலையை அடுத்துள்ள கன்னியா வெந்நீர் ஊற்று பகுதிக்கு அருகாமையில் இந்த தென்கயிலை ஆதீனம் அமைந்துள்ளது. திருகோணமலை நகரில் இருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் தென் கயிலை ஆதீனம் அமைந்துள்ளது

மலையும் மலை சார்ந்த பிரதேசமான இந்த பிரதேசத்திலே கடந்த ஐந்து வருடங்களாக அகத்திய முனிவர் இந்த பாரிய கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

பார்க்கும் இடமெல்லாம் சிவலிங்கங்கள். ஒரு கணம் எம்மையே மறந்த பரவச நிலை.

திருமந்திரத்தை உலகிற்கு அளித்த திருமூலர் பாடிய 3000 திருமந்திரங்களை இவ் வையகம் உள்ள வரை நினைக்க வேண்டும் என்பதற்காக 3000 சிவலிங்கங்கள் வைப்பதற்காக அகத்திய முனிவர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்..

*எப்பேறப்பட்ட ஒரு உயர்ந்த கலாச்சாரம் இலங்கையின் இருந்துள்ளது என்பதை இங்கே சென்று பார்த்தால் உணர முடியும்....*

———— **வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு நிருபர்**





# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**செ. மதுரன், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைமைப் பதவியை தற்காலிகமாக பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த. சித்தார்த்தன் அல்லது செல்வம் அடைக்கலநாதனிடம் வழங்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரன் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** கூட்டமைப்புக்கு புதிய தலைமை, ஆகக்குறைந்தது அதன் பாராளுமன்ற குழுவுக்காவது ஒருவர் தலைவராக நியமிக்கவேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கும் என்று நினைக்கவில்லை. சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்திற்கு செல்லக்கூடிய நிலையில் இன்று இல்லை. அவர் அங்கு நிலையில் இல்லை என்பது இரகசியமானதல்ல. ஆனால், புதியவர் ஒருவர் என்கின்றபோது, மூன்று கட்சிகளின் கூட்டணியான கூட்டமைப்பில் ஒரு கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதபோது, மற்றைய கட்சிகளின் தலைலவர் ஒருவரை தற்காலிகமாகவாவது நியமிக்க வேண்டும் என்று அவர் சொல்வதில் தவறிருப்பதாக தெரியவில்லை. அதைவிட முக்கியமானது பத்துப்பேரைக் கொண்ட கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுவில் ரெலோவுக்கு முன்றுபேரும் சித்தார்த்தனுடன் நால்வர், சிறிதரனும் அதற்கு ஆதரவு என்றால் இப்போது சம்பந்தனைத் தவிர்த்து ஒன்பதுபேரில் ஐவர் புதிய தலைவர் நியமனத்திற்கு ஆதரவாக இருப்பார்கள் என்று நினைக்கின்றேன். தலைவர் மாற்றப் படவேண்டியது இனி தவிர்க்கப்படமுடியாதது என்றே நான் நினைக்கின்றேன்.

---

**ஆர். துஸ்யந்தன், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் போதைப் பொருட்களை கடத்தும் - விநியோகிக்கும் மையமாக வடக்கு மாகாணம் மாறியுள்ளது - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். ஒரு பொறுப்புள்ள நீதி அமைச்சரே அவ்வாறு கூறுகின்றார் என்றால் அது சரியாகத்தானே இருக்கும்? இது வடமாகாணத்தின் எதிர்காலத்தை எப்படி மாற்றும் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** நீங்கள் சொல்வதுபோல பொறுப்புள்ள அமைச்சர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். இத்தனை தெளிவாக விசயத்தை தெரிந்து வைத்திருக்கின்ற அமைச்சர், இதன்பின்னால் யார் இருக்கின்றார்கள் என்பதையும் நிச்சயம் அறிந்திருப்பார். தமிழ் தேசிய அரசியல்வாதிகள் அதன் பின்னால் அரசாங்கமோஅல்லது படையினரோதான் இருக்கிறார்கள் என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், யார் அதன் பின்னால் இருக்கிறார்கள் என்பதை வெளிச்சம்போட்டுக் காட்ட வேண்டியது அமைச்சரின் கடமை. இனி, நீங்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிப்பதெனில், வடமாகாணத்தின் எதிர்காலம் எப்போதோ நமக்கு அச்சம் தரும்வகையில் மாறிவிட்டதே.

---

**ஆர். ஜெயரூபன், களபூமி, காரைநகர்.**

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தோல்விக்குக் கட்சியின் சக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே காரணமென மற்றுமொரு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளது சரியானதுதானே?

**வியுக்தியார்:** அவர் சொன்னது சரியா பிழையா என்பது தெரியவில்லை. கோட்டாபயவின் தோல்விக்கு நாமலும் காரணமாக இருக்கலாம். ஆனால், பங்களாதேஷ் நாடு சீனாவிடம் பத்து டொலருக்கு குறைவான விலைக்கு வாங்கிய சீன கொரோனா தடுப் பூசியை பதினைந்து டொலருக்கு இலங்கை வாங்கிய போது அதற்குப் பொறுப்பாக இருந்தவர் இந்த சன்ன ஜயசுமன. என்னைப் பொறுத்தவரை அவரும்தான் கோட்டாவின் தோல்விக்கு காரணம் என்பேன்.

---

**த.சிவகணேஸ்,**
**பெஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவராக மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். முதன்முறையாக தமிழ்பேசும் மேல் நீதிமன்ற நீதிபதி மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்துக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளாராம். இது தமிழர்களாகிய நமக்கெல்லாம் பெருமையானதுதானே.

**வியுக்தியார்:** நிச்சயமாக நமக்குப் பெருமைதான். ஆனால் ஒரு திருத்தம், நமது யாழ்.மாவட்ட எம்.பி. யான நீதியரசர் விக்கினேஸ்வரனும் இதற்கு முன்னதாக அதன் தலைவராக இருந்திருக்கிறார். ஆனால் இவர் தலைவரானதில் மகிழ்ச்சி இருந்தாலும் இந்த வியுக்தியாருக் சற்று கவலையும் உண்டு. இந்தப் பதவி, பதவி மூப்பின் அடிப்படையில் வழங்கப்படுவது. நீண்ட காலம் மேல்நீதிமன்ற நீதிபதியாக இவர் இருப்பதால் அவருக்கு கிடைத்திருக்கின்றது. அவருக்கு எப்போதோ பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவரைப் போன்ற ஒருவரை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நியமிப்பார்களா என்பது கேள்விக்குரியதே. அதுதான் நமது கவலை எல்லாம்.

— அ. கௌரி சங்கர்

# நம்பிக்கை நட்சத்திரம்

சாந்தா. பெயருக்கேற்ற மாதிரி ஒரு அமைதியான பெண். வழக்கம் போல அன்றும் அவள் மாலை நான்கு மணிக்கு தனது வீட்டில் இருந்து தலையில் ஒரு பாத்திரத்தை வைத்துக் கொண்டு செல்ல ஆரம்பித்து விட்டாள். அவள் இடுப்பிலும் ஒரு பாத்திரம் இருந்தது. தலையில் உள்ள பாத்திரத்தில் இருப்பது சுண்டல் அவளுக்கு தெரிந்த ஆசீர்வாத நாடார் கடையில் இருந்து தான் அவள் சுண்டல் வாங்குவது வழக்கம். வேறு எங்கும் வாங்குவது கிடையாது. சுண்டல் வாங்கும் போது பார்த்து வாங்கவேண்டும். அதனுடன் கல், வெள்ளை சுண்ணாம்பு போன்றவற்றையும் கலந்து எடை போடும் கடைக்காரர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தனது வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்கள் கொடுக்கவேண்டும் என்பதில் ஆசீர்வாத நாடாரை மாதிரி பிடிவாதக்காரரை பார்க்க முடியாது.

வாங்கிய சுண்டலை நன்றாக புடைத்து, தூசிகளை நீக்கி, வேக வைத்து அத்துடன், மசாலா கலந்து எண்ணையில் ஓரளவு வதக்கி, அத்துடன் துருவிய தேங்காய், பிய்த்துப் போட்ட கொத்தமல்லி பிசிறுகள் இவை கலந்து கொடுக்கும்போது அதை வாங்கி சாப்பிடுபவர்கள் ருசித்து சாப்பிடுவார்கள். அவர்கள் குறைவாக வாங்கி சாப்பிடுகிறார்களோ அல்லது அதிகம் வாங்கி சாப்பிடுகிறார்களோ என்பது முக்கியம் அல்ல. அவர்களுக்கு உண்டு முடித்த பின் ஒரு நிறைவு இருக்கவேண்டும்.

தலையில் இருப்பது சற்று முன்னர் தயாரித்து எடுத்து வந்த சுண்டல் என்றால், இடுப்பில் உள்ள பாத்திரத்தில் இருப்பது பருப்பு வடைகள். அவளுடைய வாடிக்கையாளர்கள் இருக்கும் இடம் சென்னையின் முக்கிய இடமான மெரினா பீச். மாலை நேரத்தில், குழந்தைகளுடன் வருகின்ற பெற்றோர்கள் தனிமையை நாடிவரும் பிரம்மச்சாரிகள் அமைதியை நாடி வரும் சம்சாரிகள் - இவர்கள் எல்லோருக்கும் மேலாக காதலை வளர்ப்பதற்காக வருகின்ற வித விதமான காதல் ஜோடிகள் - இவர்களை நிறைய நிறைய பார்க்கலாம்.

இவர்கள் எல்லோரிடமும் இருக்கும் ஒரே ஒற்றுமை - கடலை பார்த்து தான் அமர்வார்கள். அடுத்த ஒற்றுமை - நேரம் கழிவதற்காக, பர்சில் இருந்து பணம் எடுத்து கொடுத்து சுண்டல், பயறு, வடை போன்றவற்றை வாங்கி வாங்கி சாப்பிடுவார்கள். எப்படி தான் இவர்களுக்கு அவ்வளவு நேரம் கிடைக்கிறதோ தெரியவில்லை.

சாந்தாவிற்கு அவர்களின் குலம் கோத்திரம் பற்றி கவலையே இல்லை. வியாபாரம், வியாபாரம் - இது தான் அவளுடைய நோக்கம். அவளுடைய சக போட்டியாளர்களிடம் இருந்து தனது வியாபாரத்தை காப்பாற்றிக் கொள்ள அவள் கையாளும் ஆயுதம்- அன்பாகவும் பணிவாகவும் பேசுதல் தரமான பொருட்களை விற்றல் போன்றவை தான். கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாக வந்து கொண்டிருக்கிறாள். இவளுக்காகவே தாமதித்து, சுண்டல் வாங்கும் வாடிக்கையாளர்கள் பெருகி விட்டார்கள். சில நேரங்களில் ஒரு மணி நேரத்தில் விற்று விடும். பல நேரங்களில் முழுவதும் விற்க ஆறு மணிக்கு மேல் ஆகிவிடும். இருட்டி விட்டால், கூட்டம் பெரும்பாலும் கலைந்து சென்று விடும். நல்ல வியாபாரம் என்றால் ஒரு நாளைக்கு அவளுக்கு லாபம் மட்டும் ரூபாய் 500 தேறும்.

இப்பொழுது சாந்தாவிற்கு வயது நாற்பது. இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு பெண் 16 வயது அடுத்தவள் 14 வயது. கணவன் கணேசன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி பத்து வருடங்களுக்கு முன்பாகவே இறந்து விட்டான். இவர்களை வளர்க்கும் பொறுப்பை சாந்தாவிற்கு கொடுத்துவிட்டு சென்று விட்டான். இரண்டு பெண்களும் நன்றாக படிப்பவர்கள். தாய் படும் சிரமத்தை நன்கு அறிந்தவர்கள். ஆனால் என்ன? அவர்களின் படிப்பு செலவு, துணிமணி செலவு இவற்றிற்காக சாந்தா என்ன என்ன பாடு படுகிறாள் என்பது அவளுக்கே சில சமயங்களில் மறந்து விடும். அதாவது மரத்து போய்விடும்.



கணவன் இறந்த பின்னர், வீட்டு வேலைக்கு சென்று வந்தாள் சாந்தா. நான்கு வீடுகளில் வேலை பார்த்து வந்தாள். காலை ஒன்பது மணிக்கு போனால், மாலை ஐந்து மணி வரை ஆகி விடும். மாதம் ரூபாய் 8000 வரை வருமானம் வரும். திடீர் திடீர் என்று, அவர்களில் யாராவது ஒருவர் வீட்டை காலி செய்து சென்று விட்டால் இவள் பாடு திண்டாட்டம் தான். வேறு வீட்டுக்காரர்களை அணுக வேண்டும்.

சில மாதங்கள் சென்றன திடீரென்று ஒரு நாள் வீட்டு வேலையை நிறுத்தி விட்டு, தனது வீட்டிலேயே இட்லி, தோசை போன்றவற்றை தயாரித்து விற்று வந்தாள். ஆனால், சில விஷமிகளின் தொல்லை தாங்க முடியாமல் போய் விட்டது. கடன் வைத்தவர்கள் கடனை திரும்பி செலுத்துவதில்லை. திடீரென்று ஒரு தினம் முடிவுக்கு வந்தாள் - காலையில் மட்டும் வீட்டில் இட்லி, தோசை தயாரித்து விற்று வந்தாள். மாலையில் மெரீனாவிற்கு வந்து விற்க தொடங்கினாள். இதன் மூலம் மாதத்திற்கு அவளுக்கு கிட்டத்தட்ட ரூபாய் 15000 வரை கிடைத்தது. மெரினாவில் அதிக பட்சம் அவளுக்கு வேலை இரண்டு மணி நேரம் தான்.

அன்று கூட்டம் அவ்வளவாக இல்லை. "நாம் சீக்கிரமாக வந்து விட்டோமா?" என்று கூட நினைத்தாள். சிறிது தூரம் சென்று கடல் அலை கண்ணில் படும் தூரத்தில் சென்று அமர்ந்தாள். பழைய நினைவுகள் இங்கும் அங்கும் வந்து போயின.

"ஏன் இன்னும் தேவிகா வரவில்லை?" - மனம் சந்தேகத்தை கிளப்பியது. தேவிகா கடந்த ஒரு வருடமாக இவளுக்கு பழக்கம். நல்ல பெண் தேவிகா மிகவும் சாதாரணமான குடும்பம் அப்பா அம்மாவிற்கு ஒரே பெண் ஒரு தனியார் பள்ளியில் வேலை பார்க்கிறாள். அரை மணி நேரத்தில் இருந்து ஒரு மணி நேரம் வரை கடற்கரை வந்து விட்டு செல்லுவாள். எல்லாம் காதல் செய்யும் லீலை தான். அவள் காதலிப்பது கண்ணன் என்பவரை. கண்ணன் தேவிகாவை விட வசதி அதிகம் உள்ளவன். அவன் மெரீனாவிற்கு வருவதே தனது காரில் தான். இவள் வருவதோ ஆட்டோவில் அல்லது தனது ஸ்கூட்டரில். பணம் என்ற அளவுகோலை வைத்து பார்த்தால், தேவிகாவுக்கும், கண்ணனுக்கும் மடுவுக்கும் மலைக்கும் உள்ள தூரம். தெரிந்தோ அல்லது தெரியாமலோ காதலித்து தொலைத்து விட்டார்கள். நாள் தவறாமல் மெரினா வந்து அரை மணி நேரமாவது பேசி விட்டு செல்வது தான் அவர்களுடைய வழக்கம்.

சாந்தா அவர்களை கவனிக்க தவறவில்லை. இவர்களை மட்டும் அல்ல. இவர்கள் மாதிரி தினமும் காதலர்கள் வருகிறார்கள் காணாமலும் போய் விடுகிறார்கள் ஒரு சிலர் திருமணம் செய்து கொண்டு அதன் பின்னர் இங்கு வந்து தங்களுடைய பழைய நினைவுகளை அசை போட வருகிறார்கள்.

தேவிகாவிடம் சாந்தாவிற்கு ஆர்வம் வரக்காரணம் இது தான். தேவிகா அவளுடைய தங்கை மஞ்சுளா மாதிரி இருந்தது தான்.

மஞ்சுளா சாந்தாவை விட ஐந்து வயது சிறியவள். அப்பொழுது சாந்தாவுக்கு இருபத்தைந்து வயது இருக்கும். மஞ்சுளாவுக்கு இருபது வயது இருக்கும். மஞ்சுளா படிப்பில் கெட்டிக்காரி. அவர்களுடைய தகப்பனார் மளிகை கடை வைத்து இருந்தார். காச நோயினால் பீடிக்கப்பட்டு இருந்ததால், அடிக்கடி அவர் படுக்கையில் இருக்க வேண்டியிருந்தது. சாந்தா பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு நிறுத்தி விட, மஞ்சுளா கல்லூரிக்கு செல்ல ஆரம்பித்தாள்.

சாந்தா தகப்பனாருக்கு உதவியாக கடைக்கு சென்று வந்து கொண்டிருந்தாள். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மஞ்சுளா காதல் வயப்பட்டாள். காதல் வயப்பட்டதோ ஒரு பணக்கார வாலிபனுடன். இவளை திருமணம் செய்து கொள்ளுவதாக வாக்கு தந்து விட்டு, திடீரென்று ஒரு நாள் மஞ்சுளாவை கூட்டிக்கொண்டு சென்று விட்டான் அந்த வாலிபன். மஞ்சுளா எழுதி வைத்த கடிதம் தான் அவர்களுக்கு விளக்கத்தை கொடுத்தது. கிட்டத்தட்ட ஒரு வருடம் மஞ்சுளாவை பற்றிய தகவல் எதுவும் இல்லை. வீட்டில் இருந்ததோ சாந்தாவும், அவளுடைய தந்தையும். தாயார் மஞ்சுளா வீட்டை விட்டு சென்று விட்ட துக்கத்தில் உயிரை விட்டு விட்டார்.

ஒரு நாள் இரவு நெருங்கும் நேரம். ஒரு ஆட்டோ வீட்டின் முன் வந்தது. தகப்பனாருக்கு மருந்து கொடுத்து விட்டு வாசலுக்கு வந்த சாந்தாவுக்கு தெரிந்தது மஞ்சுளா வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறாள் என்று. வந்தவள் எதுவும் பேசவில்லை. ஒரு மூலையில் சென்று அமர்ந்து விட்டாள். சாந்தாவுக்கு ஒன்றும் புரியவில்லை. மஞ்சுளாவிடம் விபரங்கள் கேட்கும் அளவுக்கு அவளுடைய தகப்பனாருக்கு தெம்பு இல்லை. இரண்டு நாட்கள் பித்து பிடித்தவள் போல அமர்ந்து இருந்த மஞ்சுளா மூன்றாவது நாள் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டாள். மஞ்சுளாவை திருமணம் செய்து கொள்ளுவதாக கூட்டிக் கொண்டு சென்ற வாலிபன் அவளை கர்ப்பமாக்கிவிட்டு வீட்டை விட்டு துரத்தி விட்டு, வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டது தான் மஞ்சுளாவின் நிலை என்பது பின்னர் தான் தெரிந்தது. அடுத்த ஒரு மாதத்தில் சாந்தா தனது தந்தையையும் பறிகொடுத்தாள்.

தனி மரமாக இருந்த அவளுக்கு அவள் மேல் பிரியம் கொண்ட உறவினர்கள் கண்ணனுடன் திருமணம் செய்து வைத்தனர். பத்து வருடங்கள் குடி பழக்கம் என்பதே தெரியாமல் இருந்த கண்ணன், தவறான பழக்கத்தினால், அந்த பழக்கத்திற்கு அடிமையாகி அவனும் இறந்து விட்டான். சாந்தாவை பொறுத்தவரையில் அடிமேல் அடி தான். அவளுடைய மகள்கள் தான் அவளுக்கு நம்பிக்கையை இப்பொழுது தந்து கொண்டிருக்கிறார்கள்.

தேவிகாவை பார்க்கும் போதெல்லாம் மஞ்சுளாவின் நினைவு வந்து கொண்டே இருக்கும். அவளும் மஞ்சுளாவை போல தனது வாழ்க்கையை இழந்து விடக்கூடாது என்பதில் சாந்தாவுக்கு மிகவும் கவலையாய் இருந்தது. தேவிகாவுக்கு நல்ல வாழ்க்கை அமையும் பட்சத்தில் அவள் அடையப்போகும் சந்தோசத்திற்கு அளவே இருக்காது.

நினைவுகள் கடலில் இருந்து வந்து கொண்டிருந்த அலை போல மாறி மாறி கிளம்பிக் கொண்டிருந்த நிலையில், தேவிகா வந்து சேர்ந்தாள். சாந்தாவின் அருகில் அமர்ந்தாள். தேவிகாவின் நெற்றியில் இருந்த திலகம் சிறிது கலைந்திருந்தது. அதை சாந்தா எழுந்து வந்து சரி செய்தாள். இருவரும் ஒன்றும் பேசவில்லை. மஞ்சுளாவின் வாழ்க்கை பற்றிய விபரங்கள் எதுவும் தேவிகாவுக்கு தெரியாது. அவள் இன்று வரை ஒரு சுதந்திர பறவை. வெளுத்த தெல்லாம் பால் என்று மயங்கும் விபரம் அறியாத சுதந்திர பறவை.

வழக்கம் போல தேவிகா ஜோடிகளுக்கு வேண்டிய சுண்டல் பொட்டலங்களை சாந்தா கொடுத்து முடிக்கவும், கண்ணன் வரவும் சரியாக இருந்தது.

காதலர்கள் நிலை உணர்ந்த சாந்தா எழுந்து செல்ல முயற்சிக்கவும், கண்ணன் அவளை கூப்பிடவும் சரியாக இருந்தது.

"அக்கா, ஒரு நிமிஷம் இருங்க."

"என்ன தம்பி, என்ன விசேஷம்?"

"அக்கா, ஆறு மாதமாக அப்பா அம்மா எனது திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்காமல் இருந்தவர்கள், நேற்று சரி என்று சொல்லி விட்டார்கள். அவர்களுக்கு தேவிகாவை பிடித்து விட்டது. இனி நான் தேவிகாவை திருமணம் செய்வதில் எந்த பிரச்சினையும் இல்லை".

சொல்லிவிட்டு, சாந்தாவின் கையில் ஒரு இனிப்பு பொட்டலத்தை திணித்தான். சாந்தாவுக்கு மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

"ரொம்ப சந்தோசம் தம்பி" என்று சொல்லி விட்டு எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

சாந்தாவின் கண்களும் கண்ணனின் கண்களும் பேசிக்கொண்டதை தேவிகா அறிந்து கொள்ளவில்லை அறிந்து கொள்ளவும் முடியாது.

# கொசோவோ தனிநாடு உருவாக்கம்:

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

## எண்ணெய் வள ஆதிக்க அரசியலும்.. பால்க்கன் பிராந்திய செயற்கை தேசமும்..



**1990** களின் பின் பிரிவினை கோரும் அல்பேனிய கோசவோக்களின் மீது கடுமையான அடக்குமுறையும் வன்முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டது. ஏறக்குறைய 10 லட்சம் கோசவொ அல்பேனியர்கள் அங்கிருந்து வெளியேறினர். தொடர்ந்த கலவரங்களில் பல்லாயிரக்கணக்கான அல்பேனியர்களும் செர்பியர்களும் உயிரிழந்தனர். ஐநாவும் நேட்டோவும் தலையிடத்தொடங்கின.

**1991 செர்பியாவில் பிரிந்த தனி நாடு:**

முன்னாள் யூகோஸ்லாவியவில் 1974-இல் மார்ஷல் டிட்டோவின் ஆட்சியில் சுயநிர்ணய அதிகாரம் பெற்றிருந்த கொசோவோ 1991-இல் செர்பியாவிலிருந்து பிரிந்து தனி நாடாக அறிவித்தது. செர்பியா அப்போதும், ஏன் இப்போதும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அல்பேனியா தவிர உலக நாடுகள் எதுவும் இந்த அறிவிப்பை ஏற்காத நிலையில் மிலோசெவிக் கொசோவோவை செர்பியாவின் நேரடி அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தார்.

ஆயினும் கொசோவோ தனிநாடு உருவாக்கமானது எண்ணெய் வள ஆதிக்க அவசியத்தின் அடிப்படையில் தனிநாடாக உருவானது என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும்.

பால்க்கன் பிராந்தியத்தில் பொருளாதார காரணங்களுக்காக செர்பியாவின் உள்ளே நுழைந்து ஒரு செயற்கையான தேசமாக "கோசொவோ" அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் கூட்டாக உருவாக்கியுள்ளன என்பதே உண்மை.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து எண்ணெய் வளத்துக்கும், எரிபொருட்கள் பரவலான வினியோகத்திற்காக மேற்கு ஐரோப்பாவிற்கு வருகையில் ஜெர்மனியும் பிரான்சும் பெரிதும் பயனடையும் என்பதால் இந்நாடுகள் கோசொவோ விடுதலையையும் அங்கே தங்களின் ராணுவ இருப்பையும் முன்னிலைப் படுத்த தனிநாட்டு உருவாக்கம் அக்காலத்தில் மேலோங்கியது.

**செர்பியாவில் நேட்டோ குண்டு மழை:**

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர நேட்டோ விமானங்கள் செர்பிய தரப்பு மீது, 72 நாட்கள் தொடர்ந்து குண்டு மழை பொழிந்ததில் செர்பியா சின்னாபின்னமாக்கப்பட்டது. அப்போது பொறிஷ் யெல்ட்சின் தலைமையிலான ரஷ்ய அரசு நேட்டோ தாக்குதலை தடுக்காமல், கண்ணை மூடி - மௌனம் சாதித்தது. இதன் பின் செர்பியப்படைகள் கோசவோவிலிருந்து பின்வாங்க, கொசோவோ ஐநாவின் பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதியாக மாறியது.

**ரஷ்யாவின் வீட்டோ அதிகாரம்:**

கொசோவோவின் சுதந்திரம் சட்டவிரோதமானது என்றும் ரஷ்யா அறிவித்தது. இருப்பினும், கொசோவோவின் சுதந்திரம் அறிவிக்கப்பட்ட நான்கு நாட்களுக்குள், பதினைந்து நாடுகள் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஆஸ்திரேலியா உடனடியாக கொசோவோ சுதந்திரத்தை அங்கீகரித்தன. இந்நிலையில், உலகத்தின் பல பகுதிகளில் உள்ள செர்பியர்கள் கொசோவோ விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

2009 இன் நடுப்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பினர்களில் 22 பேரும், உலகெங்கிலும் உள்ள 63 நாடுகளும் கொசோவோவை சுதந்திரமாக அங்கீகரித்தனர். தற்போது பல நாடுகள் கொசோவோவில் தூதரகங்கள் அல்லது தூதுவர்களை நிறுவியுள்ளன.

இருப்பினும், கொசோவாவிற்கு சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை கொசோவோவின் சுதந்திர இருப்பை அங்கீகரிக்காத வரை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ மற்றய நாடுகள் கொசோவோவிற்கு ஆதரவாக செயற்படுகின்றன.

பெப்ரவரி 17, 2008 இல், கொசோவோ சட்டமன்றம் ஒருமனதாக செர்பியாவிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடாக அறிவித்தது.

**துருக்கிய ஆதிக்கம்:**

பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய, ஆசிய பகுதிகளை தரை வழியாக இணைப்பதாலும், மத்தியதரைக் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடையேயான நிலப்பரப்பை கொண்டிருந்ததாலும், வாணிப முக்கியத்துவம் மிகுந்தாகவும் பல கலாசாரங்களையும் பேரரசு மாற்றங்களையும் கண்ட பிரதேசமாகவும் பால்கன் பிரதேசம் விளங்கியது.

ரஷ்யாவின் பெரும்பான்மை இனமான ஸ்லாவியர்கள் பல நூற்றாண்டுகள் முன்பே இங்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வந்தனர். செர்பியாவில் ஸ்லாவிய பழமைவாத கிறித்தவரும், செர்பியப்பகுதியாக இருந்த கொசோவோவிலும் அதன் அண்டை நாடான அல்பேனியாவிலும் முஸ்லீம்களும், குரோவேஷியாவில் கத்தோலிக்க மதத்தவரும் பெரும்பான்மையாக உள்ளனர்.

செர்பியா, பால்கன் நாடுகள் என்றழைக்கப்படும் தீபகற்பப் பகுதியில் உள்ள பிரதேசம். குரோயேஷியா, போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா, மாசடோனியா, செர்பியா, மாண்டிநெக்ரோ, அல்பேனியா, க்ரீஸ், பல்கேரியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு இது .

**ஓட்டோமான் பேரரசு தோல்வி**

19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா பலம் பெறத் தொடங்கியதனால் துருக்கியை மையமாகக் கொண்ட ஓட்டோமான் பேரரசு பலம் இழக்கத் தொடங்கியது.

1878-இல் நடந்த ஓட்டோமான் - ரஷ்யப்போரில் ஓட்டோமான் பேரரசு தோல்வியடைய, ஸ்லாவிய ரஷ்யாவின் நட்பு இனமான செர்பியர்கள் மீண்டும் பலம் பெறத்தொடங்கினர்.

ஓட்டோமான் பேரரசில் மேலாண்மையை இழந்த செர்பியர்கள் அதனை மீண்டும் பெறும் நாள் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குப்பின் வந்தது.

செர்பிய தேசியவாதம் பல மடங்கு பலமடைந்தது. ஆனால் இதன் எதிர்விளைவாக கொசோவோ நிலப்பரப்பில் சிறுபான்மையாய் இருந்த செர்பியர்கள் அல்பேனியர்களால் வடக்கு நோக்கி தள்ளப்பட்டனர்.




கொசோவோ நிலப்பகுதி இஸ்லாமிய அல்பேனியர்கள் ஆதரவு பகுதியாகவும், செர்பியா ஆர்த்தடாக்ஸ் கிறித்துவத்தைச் சார்ந்தவர்கள் பகுதியாகவும் உருவெடுத்தது. 19-ஆம் நூற்றாண்டின் முடிவில் செர்பியர்கள் கையில் மீண்டும் செர்பிய ஆதிக்கம் முழுமையாக வந்தடைந்தது.

1912-இல் செர்பியா உள்ளிட்ட நான்கு பால்கன் நாடுகள் ஒன்றிணைந்து துருக்கியின் நட்பு நாடான அல்பேனியா மீது போர் தொடுத்தன. இப்போரில் அல்பேனியா தோல்வியைத் தழுவ, அதைத்தொடர்ந்து கொசோவோவில் செர்பியப் படைகள் நிகழ்த்திய வன்முறையில் பல கொசோவோ மக்கள் உயிரையும் உடைமையயும் இழந்தனர்.

**முதல் உலகப்போரின் மூல காரணம்:**

முதல் உலகப்போர் மூண்டதற்கே போஸ்னிய செர்பிய மாணவன் ஒருவன் ஆஸ்திரியா-ஹங்கேரி இளவரசரக் கொன்றதுதான் காரணமாக அமைந்தது. அத்துடன் ஸ்லாவிய மக்கள் வாழும் செர்பியாவுக்கு ஸ்லாவிய பெரும்பான்மை ரஷ்யா எப்போதுமே ஆதரவு தந்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஆஸ்திரியா-ஹங்கேரி செர்பியா மீது போர் தொடுக்க, ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவாகவும், ஜெர்மனி ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு ஆதரவாகவும் போர்க்களத்தில் இறங்கியதுதான் ஐரோப்பாவை முதல் உலகப்போருக்கு இட்டுச்சென்றது.

இந்நிலையில் இரண்டாம் உலகப்போர் மூண்டபோது, செர்பியர்கள் நாசிகளுக்கு எதிராக கொரில்லா படைகளாகப் போரிடத்துவங்கினர். இது முஸ்லீம்கள் மீதான வன்முறையாக உருவெடுத்தது. அல்பேனியர்களோ நாசிகளோடு ஒத்துழைத்து செர்பியர்களுக்கும், யூதர்களுக்கும் எதிரான வன்முறைகளில் ஈடுபட்டனர்.

இரண்டு உலகப்போர்களிலும் இரு தரப்புகளிலும் நிகழ்ந்த பாஸ்பர வன்முறைகள் பால்கன் பகுதியில் கிறித்துவ முஸ்லீம் உறவை கடுமையாக சீர்குலைத்து விட்டது. பார்ட்டிசன்களின் தலைமையேற்றுப் போரிட்ட கம்யுனிசத் தலைவர் மார்ஷல் டிட்டோ இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஒருங்கிணைந்த யுகொஸ்லாவியாவின் அதிபரானார்.

**மார்ஷல் டிட்டோ கம்யூனிச ஆட்சி:**

கம்யூனிச டிட்டோவின் ஆட்சி, பிரிவினை வாதத்தை ஒடுக்கும் பொருட்டு முதலில் கொசோவோவை கடுமையான அடக்குமுறையால் ஆண்டது. பின்னாளில் டிட்டோ அராபிய நாடுகளுக்கு ஆதரவாளரானார். 1967- அராபிய இஸ்ரேல் போரில் இஸ்ரேல் எதிர்ப்பு நிலையை எடுத்தார்.

இந்நிலையில் யுகோஸ்லாவியாவில் வலுவடைந்து வந்த செர்பிய தேசியவாதத்தை எதிர்க்கும் முகமாக போஸ்னிய முஸ்லீம்களை மத அடிப்படையில் 'தனி தேசிய அடையாளம் உடையவர்கள்' என டிட்டோ அறிவித்தார்.

செர்பிய தேசிய வாதம் கடுமையாக ஒடுக்கப்பட்ட டிட்டோவின் ஆட்சியில் கொசோவோவின் அல்பேனிய முஸ்லீம்களைத் திருப்தி செய்யும் வகையில் பல சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டன. இது "கிறித்துவ செர்பியர்க"ளுக்கும் "இஸ்லாமிய அல்பேனியர்களு"க்கும் இடையே நிரந்தரமான பிளவையும் வெறுப்பையும் ஏற்படுத்தி விட்டது.

**மிலோசெவிக் கால ஆட்சி :**

1980-இல் டிட்டோ மறைவுக்குப்பின் முஸ்லீம்களுக்கு எதிரான கிறித்துவ செர்பிய நடவடிக்கைகளாக பீறிட்டு வெளிக்கிளம்பின. கொசோவோக்கள் தனி நாடு கேட்பதை செர்பியர்கள் நாட்டைப் பிளவுபடுத்துவதாக கடுமையாக எதிர்க்கத் தொடங்கினர்.

இந்நிலையில் பல ஆண்டுகள் அடக்கப்பட்ட தேசியவாதத்தின் தீவிர உருவமாக செர்பிய அதிபர் மிலோசெவிக் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இவரும் டிட்டோவின் கம்யுனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்தான்.

90வீத முஸ்லீம் மக்கள் வாழும் கொசோவோவின் விடுதலைப்பிரகடனத்தை இஸ்லாமிய மக்கள் பேரவை வரவேற்றிருப்பதில் வியப்பில்லை.

1990-இன் பிற்பகுதிகளில் கொசோவோ விடுதலைப்படைக்கு இஸ்லாமிய நாடுகளின் பண உதவி கிடைக்கவும் தொடங்கியது. அல்-குவைதா அமைப் பின் தொடர்பும் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அல்பேனிய கொசோவோ தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அதன் தொலை நோக்குத்திட்டத்தின் முக்கியப் பகுதியாகும். காஸ்பியன் கச்சா எண்ணெயை மேற்கு ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லும் இந்த முக்கிய குழாய்ப்பாதையை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் முக்கியமான ஒன்று.

அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆம்போ இந்தப்பகுதியில் அதிநீள குழாய்ப்பாதை அமைப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பாதை அல்பேனியாவில் முடிவடைகிறது.

கச்சா எண்ணெய் அல்பேனியாவிலிருந்து அமெரிக்க எண்ணெய்க்கப்பல்களில் ஏற்றப்பட்டு ராட்டர்டாம் வழியாக் நியுயார்க், நியுஜெர்சி துறைமுகத்தை வந்தடையும். "மத்திய கிழக்கு நாடுகளின் மீதான எண்ணெய்ச் சார்பை வெகுவாகக் குறைக்க வேண்டும்" என்ற எண்ணம் அமெரிக்காவில் வலுவடைந்து வரும் இந்நாளில், இந்த மாற்று திட்டம் அமெரிக்காவிற்கு மிகவும் அவசியமான ஒன்று.

பல நூற்றாண்டு வரலாற்றுச்சிக்கல்களில் உருவாகிக்கிடக்கும் இந்தப்பிரச்சனை கொசோவோவின் விடுதலையுடன் முடிந்து விடாது என்பது மட்டும் நிச்சயம்.வரலாறு நிலையாக ஓரிடத்தில் நின்று விடுவதில்லை. நியாயம் கிடைக்காத வரலாற்று அநீதிகள் வடுவாகிப் போனாலும் வலியை இழப்பதில்லை.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**06.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**06.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இன்று சண்டி ஹோமம் ஆரம்பம்!



அம்பாறை, நவ. 06

உலகிற்கு முதல் சைவசித்தாந்த நூலை தந்தவரும் நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அளித்த மூத்த சித்தரான திருமூலர் பெருமானின் குருபூஜையை முன்னிட்டு நடைபெறும் சண்டி ஹோமம் இந்த வருடம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் தலைமையில் மட்டக்களப்பு அமிர்தகழியில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும் சண்டி ஹோமம் தொடர்ந்து நாளையும் நாளை மறுதினமும் நடைபெற உள்ளது.

இலங்கையின் இலங்கை பிரபல வேத வாத்தியார் சிவ ஸ்ரீ வத்சாங்க குருக்களின் தலைமையிலான வேத வாத்தியார்கள் சண்டி ஹோமதை நடத்தி வைக்கின்றார்கள். அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருக்கின்றார்கள். ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு அனைத்து காரிய தடைகளையும் நீக்கும் வஞ்சா கல்ப கணபதி ஹோமம் நடைபெறும். தொடர்ந்து அதிகாலை 5 மணிக்கு அனைத்து தோஷங்களை நீக்கும் நவகிரக ஹோமமும் காலை 6 மணிக்கு அனைத்து செல்வங்களையும் தரும் குபேர லட்சுமி ஹோமமும் காலை 8 மணிக்கு பூர்ணாகுதி இடம்பெறும்.

பின்னர் மாலை 5 மணிக்கு மரகதலிங்கத்தை சுற்றி அனைவரும் அமர்ந்து அபூர்வ தெய்வீக அதிர்வலைகளை உலக நன்மைக்காக எழுப்பும் ருத்ர பாராயணம், பஞ்சாட்சர ஜெபம் இடம் பெறும்.

நாளை திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு அனைத்து கர்ம வினைகளையும் கழைந்து சிவபதமளிக்கும் ஏகாதச ருத்ர ஹோமம் தொடர்ந்து காலை 8மணிக்கு பூர்ணாகுதி இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு நமக்குள் இருக்கும் அபூர்வ ஆற்றலான குண்டலினி சக்தியை விழிக்க செய்து அனைத்து வித சித்திகளையும், ஆற்றல்களையும் கொடுக்கும் ஸ்ரீ சக்ர பூஜை, ஆதார சக்ர பூஜை, தேவி மகாத்மிய பாராயணம் இடம்பெறும்.

நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமை அபூர்வமான ஐப்பசி பௌர்ணமி திதியில், அதிகாலை 3 மணிக்கு மாபெரும் சண்டி ஹோமம் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம்பெற்று காலை 9 மணிக்கு பூர்ணாகுதி இடம் பெறும். (அ)

# யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி பாதுகாப்பு ஊழியர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 06

திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மீது வன்முறை கும்பல் ஒன்று வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய கும்பலே தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியை சேர்ந்த சதீஸ்குமார் சிந்துஜன் என்பவர் மீதே வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் விடுதியின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவேளையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கடல் உணவு தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 06

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தால் நடத்தப்படவுள்ள கடல் உணவுத் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறி தேசிய தொழில் தகைமை மட்டம் 5க்குரியது. 18 மாதங்களைக் கொண்ட இக்கற்கை நெறி முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளதாகவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது.

இக்கற்கை நெறியை கற்க விரும்புவோர் எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களை முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது 071 8349073 மற்றும் 0762939888 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொண்டு பெற முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மகனை கோடரியால் தாக்கி கொன்ற தந்தை கைதானார்

கொழும்பு, நவ. 06

குருநாகல் ரிதிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடலு பொல பிரதேசத்தில் தந்தையொருவர் தனது மகனைக் கொலை செய்துள்ளதாக ரிதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த கொலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த 29 வயதுடைய நபர் உறங்கிக் கொண்டிருந்தபோது, குறித்த இளைஞரின் தந்தை தனது மகனை கோடரியால் தாக்கிக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும், பெற்றோரிடம் பணம் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்து வந்துள்ள தாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த தந்தை பொலிஸில் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ரிதிகம பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கைக்கு தேவை:
## சிங்கள மக்களை சரியாக வழிநடத்தக்கூடிய ஒருவரே



சிங்கள மக்களை சரியான மார்க்கத்தில் வழிநடத்தி சிறுபான்மை இன மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் அங்கீகரித்து தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தபுஷ்டியான அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காணக்கூடிய சிங்கள தலைவர் ஒருவரே தேவை.

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, சுனாக்கின் உயர்வை அடுத்து இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்கள் அரசியல் உயர்பதவிகளுக்கு வருவது குறித்த கதைகள் பேசப்படுவதைப் போன்று 2008 ஆம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா வெற்றிபெற்றதை அடுத்தும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இலங்கையில் சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை அவமதிக்கும் சிந்தனைப் போக்கை தீவிரமாக முன்னெடுப்பவர்களில் ஒருவரான பேராசிரியர் நளின் டி சில்வா இலங்கையில் ஒபாமாவின் சமாந்தரம் குறித்து சில கட்டுரைகளை அந்த காலப்பகுதியில் எழுதியிருந்தார்.

ஒபாமா அமெரிக்கர்களினால் குறிப்பாக வெள்ளை அமெரிக்கர்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவராக இருந்ததற்கு பிரதான காரணம் அமெரிக்காவின் ஆங்கில கிறிஸ்தவ கலாசாரத்தின் முக்கியத்துவத்தை (மேலாதிக்கத்தை) அவர் ஏற்றுக்கொண்டமையேயாகும் என்று சில்வா கூறினார்.

இலங்கையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர் ஒருவர் சிங்கள பௌத்த கலாசாரத்தின் மேலாதிக்கத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டால் அவரை பிரதமராகவோ ஏன் ஜனாதிபதியாகவோ கூட தெரிவுசெய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதே அவரின் வாதமாக இருந்தது.

அத்துடன் அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் அடிமை முறையை ஒழிப்பதற்கு வெகு முன்னதாகவே இலங்கையில் சிங்கள பௌத்தர்கள் நாயக்க மன்னர்களை தங்கள் மன்னர்களாக ஏற்றுக்கொண்டார்கள் என்றும் சில்வா எழுதினார்.

சிங்கள பௌத்த கலாசாரத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்வதே பிரதானமானது என்றால் அத்தகைய நிலைப்பாட்டுக்கு ஒத்துப்போகக்கூடியவரான கதிர்காமரை பிரதமராக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனளிக்காமல் போனது ஏன் என்று விளங்கவில்லை.

ஒபாமாவை ஜனாதிபதியாக்கி அமெரிக்கா வரலாறு படைத்து விட்டது. சுனாக்கை பிரதமராக்கி பிரிட்டன் வரலாறு படைத்துவிட்டது. இலங்கையர்களால் அவ்வாறு வரலாறு படைக்கமுடியுமா என்று கேள்வி எழுப்புவதில் அர்த்தமில்லை. இலங்கையின் சிங்கள பௌத்த அரசியல் ஒருபோதுமே ஆரோக்கியமான ஒழுக்க நியாய பாரம் பரியத்தை கொண்டதாக இருந்ததில்லை. அதில் மாறுதல் ஏற்படக்கூடிய அறிகுறிகளும் இல்லை.

உண்மையில் இலங்கைக்கு தேவைப்படுவது ஒரு ஒபாமாவோ அல்லது ஒரு சுனாக்கோ அல்ல. சிங்கள சமுதாயத்தின் தவறான சிந்தனைகளுக்கு பின்னால் இழுபட்டுச்செல்லாமல் அவர்களை சரியான மார்க்கத்தில் வழிநடத்தி சிறுபான்மை இன மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் அங்கீகரித்து தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்த புஷ்டியான அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காணக்கூடிய சிங்கள தலைவர் ஒருவரே தேவை.

## குரங்கம்மை...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் முதலாவது குரங்கம்மை நோயாளர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இனங்காணப்பட்ட நிலையில் , அது தொடர்பில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் நோய்க் கட்டுப்பாட்டு முறை முறையாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தான் நோய்க்குள்ளான நபரை விரைவாக அடையாளம் காண முடிந்தது. மேலும், குரங்கம்மை நோய் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நெருங்கிய தொடர்பு மூலம் மட்டுமே பரவும். அது பல்வேறு வழிகளில் ஏற்படலாம்.

இந்த நோய் சிக்குன் குனியா போன்றதாகும். இவ்வாறான வைரஸ் பாதிப்புகள் அவ்வப்போது ஏற்படும். எனினும், இந்நோய் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். தேவையான சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான நோயாளிகளை சுகாதார திணைக்களம் உன்னிப்பாக கவனித்து வருகிறது.

நாட்டில் குரங்கம்மை நோய்க்கு உள்ளான நபருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதோடு, அவருடன் நெருங்கிய தொடர்பினை பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இது எவ்விதத்தில் அச்சப்படவேண்டிய நிலைமை அல்ல.

இந்நோயை இனங்காண்பதற்கு முன்னெடுக்க வேண்டிய பரிசோதனைகளுக்கான சகல வசதிகளும் மற்றும் சிகிச்சைகளுக்கான மருந்துகளும் நாட்டில் உள்ளன. எனவே பிரதேசங்களைத் தனிமைப்படுத்தல்,விமான நிலையத்தை மூடுதல் மற்றும் பொது இடங்களை மூடுதல் என்பது அவசியமற்றவையாகும்.

கடந்த மே மாதம் இந்நோய் பரவல் உலகில் பரவ ஆரம்பித்தது. ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகளில் தீவிரமாகப் பரவலடைந்து தற்போது குறைவடைந்துள்ளது. தென்னாசிய நாடுகளில் இது வரையில் 23 நோயாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் மாத்திரமே உயிரிழந்துள்ளார். உலகலாவிய ரீதியில் 7, 434 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, அவர்களில் 29 பேர் உயிரிழந்துள்ளனர்-என்றார். (அ)

## மக்களுடன்...

நடத்தவேண்டும். இல்லையெனில் 220 இலட்சம் மக்களுடன் வீதியில் இறங்கி தேர்தலைச் சந்திப்போம்.”

- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

கூட்டுத் தந்திரோபாயங்களால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என்று அரசிடம் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுரம் கிழக்கு தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் தலைவராக மகிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் ஊடாக உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றது. பல்வேறு உபாய வார்த்தைகளைப் பயன்படுத்தி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை மேலும் ஒத்திவைக்காமல் நடத்தவேண்டும் என்று மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்

இந்த ஆணைக்குழுவின் ஊடாக புதிய மாகாண சபை மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கின்றது.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்காமல் மக்கள் அபிப்பிராயத்திற்குச் செவிசாய்த்து, அவர்கள் வாக்களிக்கும் வகையில் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்படவேண்டியதே மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை.

உரிய காலத்தில் அந்தந்த தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும், பல்வேறு தந்திர உத்திகளை கையாண்டு தேர்தலை நடத்துவதற்கு தாம் எதிர்ப்பு என்றும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார்.

அவரது அந்த அறிக்கைகள் இன்றும் செல்லுபடியாகும் என்றால், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் பதவியைப் பெற்று தேர்தலை ஒத்திவைக்கும் தந்திர உத்தியில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என எதிர்க்கட்சியாகக் கோரிக்கை விடுக்கின்றோம்-என்றார். (அ)

## வவுனியாவில்...

இதன்போது பஸ்ஸின் சாரதியும், இளைஞர் ஒருவரும், யுவதி ஒருவரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இதேவேளை, பஸ்ஸில் பயணித்த 16 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் நால்வர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்தில் இளைஞர்கள் இருவரும் யுவதி ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதியான உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவபாலன் சிவரூபன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

அத்துடன் பருத்தித்துறை, இன்பர்சிட்டியைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது 25) என்ற இளைஞரும் மரணமடைந்தார்.

வெளிநாட்டுப் பயண ஏற்பாட்டுக்காக குறித்த பஸ்ஸில் பருத்தித்துறையிலிருந்து கொழும்பு சென்ற வேளையிலேயே விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த யுவதி யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவபீட மாணவியாவார். நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் சயாகரி (வயது-23) என்பவரே உயிரிழந்தார்.

யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையில் கல்வி கற்றுக்கற்ற முதலாம் வருட மாணவியான அவர், நேற்று முன் தினம் இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, விபத்தில் உயிரிழந்தார்.

விபத்து ஏற்பட்ட வேளை அதே திசையில் பயணித்த மற்றுமொரு அதி சொகுசு பஸ்ஸின் சாரதி தனது பஸ்ஸை விபத்தில் இருந்து தடுப்பதற்காக வீதியின் ஓரமாகச் செலுத்தி இன்னொரு பாரிய விபத்தைத் தவிர்த்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா மற்றும் ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## தடம்புரண்டது...

தடம் புரண்டது.

குறித்த ரயிலின் இயந்திரம் மற்றும் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டதன் காரணமாக வடக்குக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். பல்கலை துணைவேந்தருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சி.சிறிசற்குணராஜா மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவரே இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

மாணவர்களின் உரிமைக்காகவும் அடக்குமுறைக்கு எதிராகவும் வரைமுறையுடன் செயற்பட்ட தன்னைப் பழிவாங்கப்போவதாக துணைவேந்தர் பகிரங்கமாகக் கூறியுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவரின் முறைப்பாடு கிடைக்கப் பெற்றதாகவும் அது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (அ)

## மொட்டுக்...

உறுப்பினர்களின் பெரும்பாலானவர்கள், டலஸ் அழகப்பெரும தலைமை யிலான சுதந்திர மக்கள் காங்கிரஸில் இணைய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சியில் இணைய விரும்பாத பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் இவ்வாறு சுதந்திர மக்கள் காங்கிரஸில் இணைய தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. சுதந்திர மக்கள் காங்கிரஸில் இணைவது தொடர்பாக அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

“ எமக்கு தற்போது மொட்டுக்கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிட முடியாது. நாங்கள் அந்த கட்சியில் இருந்து விலகி இருக்கின்றோம்.எமக்கு தேவையான எமது நோக்கங்களை மொட்டுக்கட்சியில் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனது.

இதனால், மக்களுக்கு சேவை செய்யவும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சுதந்திர மக்கள் காங்கிரஸில் தேர்தலில் போட்டியிட முறை ஒன்றை ஏற்படுத்தி தருங்கள்” என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனடிப்படையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு சுதந்திர மக்கள் காங்கிரஸ் ஊடாக உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட உள்ளது. இது சம்பந்தமான பேச்சுவார்த்தை பல உள்ளூராட்சி சபை பிரதேசங்களை சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர். (அ)

## நாட்டில்...

தற்போது ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மனிதனால் உருவாக்கப்பட்டதே எனவும், விநியோகஸ்தர்கள் தேவையான எரிபொருள் இருப்புகளுக்கான கட்டளைகளை வழங்குவதில் தவறியமையே பிரதான காரணம் எனவும் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

“தங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு மற்றும் இழப்புகளுக்கு, சரியான நேரத்தில் கட்டளை வழங்க தவறிய விநியோகஸ்தர்களே தான் காரணம்,” என்று அவர் கூறினார்.

உலகச் சந்தையில் எரிபொருள் விலைகள் வெகுவாகக் குறைந்துள்ளதுடன், அரசாங்கத்தின் எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி மேலும் குறைக்கப்படும் என விநியோகஸ்தர்கள் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படாததால், விநியோகஸ்தர்கள் மீண்டும் கட்டளைகளை அனுப்புகின்றனர்.

உலக சந்தையில் ஏற்படும் விலை ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பற்றாக்குறை ஏற்பட்டால், நிலைமையை மீட்டெடுக்க குறைந்தபட்சம் மூன்று நாட்கள் ஆகும். அதன்படி, திங்கட்கிழமை பிற்பகலில் செயற்கை எரிபொருள் தட்டுப்பாடு முடிவுக்கு வந்து, விநியோகம் வழக்கம் போல் தொடங்கும்-என்றார். (அ)

## நிதி...

டால் 14 நாட்களுக்குள் புதிய நியமனத்தை வழங்கிவிடவேண்டும்.

இதற்கமையவே தனது கட்டுப்பாட்டின் கீழிருந்த நிதி அமைச்சை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அலி சப்ரிக்கு வழங்க விருப்பு தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. (அ)

## இலங்கையின்...

குறித்த பின்வரிசை வணிகக் குழுவின் விவாதம் எதிர்வரும் 9ஆம் திகதி பொதுச் சபையில்நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பின்வரிசை உறுப்பினர்களுக்கு அவர்கள் விருப்பமான விவாதங்களை முன்வைக்க, பின்வரிசை வணிகக்குழு வாய்ப்புகளை வழங்குகிறது.

முன்னதாக கடந்த ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது பிரித்தானியா தலைமையிலான இலங்கை தொடர்பான முக்கிய குழுவே, இலங்கைக்கு எதிரான யோசனையை முன்னகர்த்தி அதனை நிறைவேற்றியது.

இதன்படி இலங்கையின் போர் குற்றம் தொடர்பான பொறுப்புக்கூறல் உள்நாட்டில் இருந்து சர்வதேசத்தின் கைகளுக்கு செல்கிறது.

எனினும் இதனை இலங்கை கடுமையாக ஆட்சேபித்து வருகிறது. (அ)

## தமிழருக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எம்மைச் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகளும் புதிய அரசமைப்பு தொடர்பிலும், தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்துவம் வழங்கிக் கலந்துரையாடி வருகின்றனர். எனவே, இந்தக் கருமத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான அனைத்துப் பணிகளும் நிறைவுக்கு வர வேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன் கைதிகள் விவகாரம் (தமிழ் அரசியல் கைதிகள்), காணி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை அரசு வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே கைதிகள் (தமிழ் அரசியல் கைதிகள்) சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

நல்லாட்சி அரசில் தீர்வு விடயத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது. ஆனால், தற்போது கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. ஒத்துழைப்பு கிடைக்கின்றது. ஆனால், அந்த ஒத்துழைப்பு முழுமையான ஒத்துழைப்பாக இருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் காணி விவகாரம் தொடர்பில் பல முறைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்மிடம் முன்வைத்துள்ளனர். இவை தொடர்பில் நாம் நேரில் ஆராந்து விரைந்து தீர்வு காண்போம். எந்தத் தரப்பும் பாதிக்காத வகையில் நாம் தீர்மானங்களை எடுப்போம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஜீவன், பவித்ரா உள்ளிட்ட சிலருக்கு அமைச்சு பதவி?

## ஜனாதிபதி ரணில் திட்டம்

கொழும்பு, நவ. 06

**வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் பல அமைச்சர்களை நியமிக்க உள்ளதாக உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அரசியலமைப்பின் பிரகாரம் அமைச்சரவையை 30 ஆக ஜனாதிபதியினால் அதிகரிக்க முடியும்.

அரசாங்கத்தை நடத்துவதற்கு எஞ்சியுள்ள அமைச்சர்களை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி, சி.பி.ரத்நாயக்க மற்றும் எஸ்.எம். சந்திரசேனவுக்கு அமைச்சர் பதவி கிடைக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் புதிய அமைச்சரவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்று அல்லது இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் நியமிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (அ)

# இலங்கை யானை தேவி அமெரிக்காவில் கொலை!



கொழும்பு, நவ. 06

இலங்கையைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் யானை ஒன்று வயது தொடர்பான பிரச்சினைகளால் உடல்நிலை மோசமடைந்ததால் அமெரிக்காவின், சான் டியாகோ மிருகக்காட்சிச்சாலையில் கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளது.

மிருகக்காட்சிச்சாலை வெளியிட்ட அறிக்கையில், தேவியென்ற பெயருடைய யானை சிகிச்சையில் இருந்ததாகவும், ஆனால் தேவியின் நடமாட்டம் குறைந்து விட்டதாகவும், வனவிலங்கு பராமரிப்பு நிபுணர்கள் தேவியை கருணைக்கொலை செய்ய "கடினமான முடிவை எடுத்துள்ளனர்" என்றும் கூறியது.

உயிரியல் பூங்கா பேஸ்புக் பதிவில், "சான் டியாகோ உயிரியல் பூங்கா குடும்பம் இதயம் உடைந்து விட்டது. யானைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உலகெங்கிலும் உள்ள விருந்தினர்களை அவர் ஊக்குவித்தது. தனது இனத்திற்கான தூதராக ஒரு குறிப்பிடத்தக்க பாரம்பரியத்தை விட்டுச் சென்றது. தேவி 1977 இல் இலங்கையில் உள்ள யானைகள் சரணாலயத்தில் இருந்து மிருகக்காட்சிசாலைக்கு வந் தது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

58 வயதான மேரி என்ற ஆசிய யானையும், 42 வயதான ஆபிரிக்க யானை ஷபாவும் தேவியுடன் யானைகள் பராமரிப்பு மையத்தில் வசித்து வந்தன.

தேவி இறந்த பிறகு, இரண்டு யானைகளும் அதனது உடலைப் பார்க்கவும், "விடை பெறவும்" அனுமதிக்கப்பட்டன.

காடுகளில் உள்ள யானைகள் மிகவும் சமூகப் பிராணிகள். விஞ்ஞானிகள், மனிதர்கள் இறந்த அறிமுகமானவர்களுக்காக துக்கம் அனுசரிக்கக் கூடிய நடத்தைகளைச் சிலர் அவதானித்ததாகக் கூறுகின்றனர்.

சான் டியாகோ விலங்கியல் பூங்கா கடந்த ஆறு ஆண்டுகளில் உடல் நலக் காரணங்களுக்காக மற்ற இரண்டு யானைகளை கருணைக் கொலை செய்துள்ளது. ராஞ்சிப்பூர், 50 வயதான ஆசிய ஆண், 2016 இல் இறந்தது. டெம்போ, 48 வயதான ஆபிரிக்க பெண் யானை, 2019 இல் கருணைக்கொலை செய்யப்பட்டது. (அ)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
Passport அவசியமில்லை
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இன்னும் இரண்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
விசா வாய்ப்பு
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
V2 Travels and Tours Facebook
V2 Travels 0768226240 0768226244

# குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் மூலம் சுகாதார ஊழியர்களுக்கு வைரஸ் தொற்றாது!

கொழும்பு, நவ. 06

இலங்கையில் இனங்காணப்பட்ட குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் ஊடாக சுகாதார ஊழியர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சமித்த கினிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கும்போது சுகாதார ஊழியர்கள் பாதுகாப்பாக பணியாற்றுவதால் அவர்களுக்கு வைரஸ் பரவும் அபாயம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபரின் குடும்ப உறுப்பினர்களுக்கு வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாகவும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், பிசிஆர் மூலம் அடையாளம் காணப்பட்ட குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபரின் மாதிரிகள் மரபணு வரிசை பகுப்பாய்வு மூலம் உடனடியாக உறுதிப்படுத்தப்படவேண்டும் என சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார். (அ)

# ஜானகி சிறிவர்தனவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, நவ. 06

திலினி பிரியமாலியின் நிதி விவகாரங்களுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் ஜானகி சிறிவர்தனவை இம்மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜானகி சிறிவர்தன கிறிஸ் குழுமத்தின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்துவதன் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

இவர் கோட்டை, கிறிஸ் கட்டடத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உடல் ரீதியாக துன்புறுத்தினர்!

## பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழு சென்றார் ஹிருணிகா



கொழும்பு, நவ. 06

மருதானையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது தாம் உட்பட இரண்டு பெண்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களால் தேவையற்ற உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதாக திருமதி ஹிருணிகா பிரேமச்சந்திர மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான காணொளி நாடாக்கள் மற்றும் அதிகாரிகளின் இலக்கங்களை ஆணைக்குழுவிடம் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# திருக்கோணேஸ்வரத்தில் பல் சமயத் தலைவர்கள்





மட்டக்களப்பு, நவ. 06

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் மதத் தலைவர்கள் திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு நேரடி விஜயம் செய்துள்ளனர்.

நேற்று மாலை சென்ற அவர்கள், ஆலய வளாகத்தில் ஆலய வளாகப் பார்வையிடலிலும், தரிசிப்பிலும், உரையாடலிலும் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து அதி வணக்கத்துக்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளைச் சந்தித்து அவர்கள் உரையாடினார்கள். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.